Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

மின்னியல், இலத்திரனியல்
உபகரணங்கள் பெறுவதற்கு OR
பழுதுபார்க்க, பாடல்கள், படங்கள், ஒலி, ஒளி
நாடா, இசை தட்டுக்கள் பெறுவதற்கு நாட
வேண்டிய இடம்
T.V.R. ELECTRONIC'S
NO 88/1
DOCTOR LANE
KALUWANCHIKUDI.
காட்சியறை
T.V.R SONY SHOW ROOM
பிரதான வீதி,
(மக்கள் வங்கி அருகாமை)
களுவாஞ்சிகுடி

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 21 06.11.2004 சனிக்கிழமை ஓசை 160

# நோர்வே வெளிவிவகார அமைச்சர் புதனன்று இலங்கை வருகிறார்!

## பேச்சுக்களை விரைவாக ஆரம்பிக்க முயற்சி

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பித்து சமாதானத்தை விரைவாக்கும் வகையில் நோர்வே வெளி விவகார அமைச்சர் பீற்றர்ஸன் எதிர்வரும் புதன்கிழமை கொழும்பு வருகின்றார்.**

இவர் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களைக் கிளிநொச்சிக்கு சென்று சந்திக்கக் கூடிய வாய்ப்பிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் நவம்பர் 10ம் திகதி கொழும்பு வரும் பீற்றர்ஸன்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக சர்வதேச சமூகம் புரிந்துள்ளது

### நிர்வாகப் பொறுப்பாளர் தயாமோகன்

(எஸ்.ரவீந்திரன்)

தமிழீழ விடுதலைப்புலிகள் தயாரித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைவு தொடர்பான விளக்கத்தை இன்று சர்வதேச சமூகம் ஆளமாகப் புரிந்துள்ளனர்.

இவ்வாறு மட்டு அம்பாறை நிர்வாகப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

பாலையடி மருத்துவமனை திறப்பு விழா நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்ட தயாமோகன் அங்கு உரையாற்றுகையில்:-

தமிழீழ விடுதலைப் புலிக

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## காத்தான்குடி ----------

## குவா பள்ளிவாயல் நம்பிக்கையாளர் நேற்று பொலிசாரால் கைது

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடி பள்ளிவாயல் பிரதம நம்பிக்கையாளரும் பிரபல வர்த்தகருமான எம்.அஜ்ரப் ஹாஹியார் நேற்றுக் காலை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அண்மையில் காத்தான்குடியில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பாக அவர் மீது தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டையடுத்தே கைது செய்யப்பட்டுள்ளார், இவர் நேற்று மட்டக்களப்பு நீதிமன்றில் நீதவான் எம்.எச்.எம்.அஜ்மீர் முன்னிலையில் ஆஜர் செய்தபோது எதிர்வரும் 9ம் திகதி ஆஜர்ப்படுத்துமாறும், அதுவரை விளக்க மறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

## கஞ்சிகுடியாறு மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானம்

(எஸ்.சர்வேஸ்வரன்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு கஞ்சிகுடியாறு மாவீரர் துயிலுமில்லம் புனரமைக்கப்படுகின்றன. அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி ஜனார்தனன், அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் ஆகியோர் புனரமைப்பு பணிகளை மேற்பார்வையிட்டு வந்தனர். இந்தப் பணிகளில் பொது மக்கள் வருகின்றனர். விளையாட்டுக் கழகங்கள், பாடசாலை மாணவர்கள் அணி திரண்டு சிரமதானம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## கிருஷாந்தி கொலை குற்றவாளிக்கு சட்டத்தரணிகள் எவருமில்லை

கிருஷாந்தி கொலை வழக்கு மரண தண்டனைக் குற்றவாளியான சோமரத்தின ராஜபக்ஷவை எதிர்வரும் டிசம்பர் 7ம் திகதி ஆட்கொனர்வு மனு தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு யாழ் மேல் நீதி மன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கிருஷாந்தி உட்படப் பலரது கொலைக் குற்றச்சாட்டின் பேரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முத

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

### *இன்றைய நாளில்*

#### தகவற்துளி

*பத்திரிகைத் துறைக்காக உழைத்த மலையகத் தலைவர் கோ.நடேசய்யர் நினைவு நாள்(1947)*

*உலகில் மிகப் பெரிய பாலை வனம் சகாரா (ஆபிரிக்கா) பரப்பள வு:- 90,00,000சதுர கிலோ மீற்றர்*

## தெகிவளையில் கொல்லப்பட்டவர் சிறிலங்கா இராணுவ உளவாளி

கொழும்பு தெகிவளையில் நேற்றிரவு சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் புளொட் உறுப்பினரான வேலாயுதம் தயாளகுமார் முக்கியமான இராணுவ உளவாளி என தகவல் வெளியாகியுள்ளது.

இராணுவப் புலனாய்வு பிரிவில் அண்மையில் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட புளொட் மோ

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## பாலையடிவட்டை, புதுமண்டபத்தடி வைத்தியசாலைகள் திறப்பு

(சசி.எஸ்.ரவீந்திரன்)


மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசமான பாலையடிவட்டை மத்திய மருந்தகம், புதுமண்டபத்தடி கிராமிய வைத்தியசாலை என்பன நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேல் பிள்ளை, சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் டபிள் யூ.டபிள்யூ.வில்லியம், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கிருஷ்ணகுமார், தமிழீழ விடுலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட நிருவாக சேவைப் பொறுப்பாளர் தயாமோகன், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட சுகாதார சேவைகள் பொறுப்பாளர் செல்வக்குமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## காத்தான்குடி வழமைக்குத் திரும்புகின்றது

(நமது நிருபர்)

இஸ்லாமிய மதப் பிரிவினருக்கு இடையே வெடித்த வன்முறைகள் காரணமாக கடந்த 5 நாட்களாக இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு, காத்தான்குடி பகுதி நேற்று வழமை நிலைக்குத் திரும்பியது. கடைகள், சந்தைகள், அரசாங்க தனியார் காரியாலயங்கள் யாவும் நேற்று திறக்கப்பட்டு வழமைபோல் அலுவல்கள் நடைபெற்றன.நேற்று வெள்ளிக்கிழமை வியாபார விடுமுறை நாளாக இருந்தாலும் ஜாமிஅத்துல் உலமா சபையின் வேண்டுகோளுக்கிணங்க வியாபாரிகள் தமது கடைகளை திறந்திருந்தனர். இருப்பினும் சுபி முஸ்லிம்களுக்கு சொந்தமான கடைகள் திறக்கப்படவில்லை. நேற்று வெள்ளிக்கிழமை சகல பள்ளிவாசல்களிலும் நண்பகல் ஜும்மா தொழுகை வழமை போல் நடைபெற்றது. சகல பள்ளிவாசல் சுற்றாடலிலும் பொலிசார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.



## செய்தித் துளிகள்

### வடிகான் அமைத்தல்

(சுவேந்திரா)

தம்பிலுவில் மையப் பகுதியில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட வடிகான்கள் அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

இவ் வேலைத் திட்டத்திற்கான நிதியுதவியினை அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கே.பத்மநாதன் தனது பன்மு கப்படுத்தப்பட்ட நிதியுதவியிலிருந்து ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளார். இதனை தம்பிலுவில் பிரதேச சபையினர் முன்னெடுத்துச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

### வீடுகள் அமைத்தல்.

(சுவேந்திரா)

அம்பாறை மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கே.பத்மநாதனின் முயற்சியால் தம்பிலுவில் கணக்காளர் கிராமத்தில் 50 வீடுகள் அமைக்க அமைச்சர் பேரியல் அஷ்ரப் இணங்கியுள்ளார்.

இதற்கமைய இதன் முதற்கட்ட நடவடிக்கையாக இவ் 50 வீடுகளுக்கு கூரைத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.

### அடிக்கல் நாட்டு விழா

(சுவேந்திரா)

தம்பிலுவில் மத்திய சந்தைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

திருக்கோயில் பிரதேச செயலாளர் ஏ.கே.தவராஜா தலைமையில் பிரதேச செயலக அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்தைக் கட்டடம் அமைப்பதற்கான 10 லட்சம் ரூபா நிதியினை கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பரீட்சைக்குத் தோற்றல்

(எஸ்.சசி)

பட்டிப்பளை கோட்டத்தில் இயங்கி வரும் மட். முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் இவ்வருடம் தரம் 11ல் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களின் தொகை அதிகமாகக் காணப்பட்டாலும் அதில் க.பொ.த. சா.த பரீட்சைக்கு 35 பேர்கள் மட்டுமே பாடசாலை சார்பாக தோற்றவிருக்கின்றார்கள் என்று வித்தியாலய அதிபர் எஸ்.சின்னத்தம்பிப்போடி தெரிவித்தார்.

தரம் 11ல் கல்வி பயிலும் மாணவர்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக முன்னோடிப் பரீட்சை ஒன்று. பாடசாலை மட்டத்தில் நடாத்தி நல்ல பெறுபேறுகளை எடுத்த மாணவர்களை மட்டுமே க.பொ.த சா.த பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

### புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

(எஸ்.சசி)

மட். மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்தில் இவ்வருடம் (2004) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் ஒரு மாணவி மட்டுமே சித்தியடைந்துள்ளார் என்று வித்தியாலய அதிபர் எஸ்.அகிலேஸ்வரன் தெரிவித்தார்.

மகிழடித்தீவைச் சேர்ந்த அருளானந்தம் உஷாநந்தினி என்பவரே 140 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இப்பரீட்சைக்கு 18 மாணவர்கள் தோற்றியவிடத்து இம்மாணவி மட்டுமே சித்தியடைந்தது குறிப்பிடத்தக்கது.

### நூலக வசதிகள்

(பாண்டிருப்பு நிருபர்)

வடக்கு, கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நூலக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சகல வசதிகளும் கொண்ட 282 பாடசாலைகளில் நூலகங்களும் 834 சிறுவர் நூலகங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் மாணவர்கள் கூடிய பயனைப் பெற்று வருவதாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

**ஜனாதிபதியின் பதவிக்காலம்..........**

# தேர்தல் ஆணையாளர் நீதிபதியின் ஆலோசனையைப் பெறத் தீர்மானம்

(நமது நிருபர்)

**சிறிலங்கா ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து, தேர்தல் ஆணையாளர் எதிர்காலத்தில் நீதிபதியின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

2006ஆம் ஆண்டு அடுத்த ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுமென ஆளும்கட்சியும், ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருடம் நடாத்தப்படவேண்டும் என எதிர்க்கட்சியும் தெரிவித்து வருகின்றன.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள தேர்தல் செயலகத்தின் அதிகாரியொருவர், எவ்வாறாயினும், அரசியலமைப்புச் சட்டத்தின் 30ஆம் 31ஆம் சரத்துக்களுக்கமைய, தேர்தல் நடைபெறும் தினம், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் பதிவுசெய்யப்பட வேண்டிய தினம் என்பன, தேர்தல் ஆணையாளரால் தீர்மானிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளது.

இந்த விடயம் அரசியலமைப்புச் சட்டத்தின் 30ஆம் சரத்தின் 5ஆம் பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், நீதிபதியின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்ட பின்னர் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தேர்தல் நடைபெறும் திகதி மற்றும் வருடம் தொடர்பாக அறிவிக்கவுள்ளதாகவும், தேர்தல் செயலகத்தின் அந்த அதிகாரி மேலும் தகவல் வெளியிட்டுள்ளார்.

## சிறிலங்கா புலனாய்வு துறையினர் வாகனங்களை மீள ஒப்படைக்குமாறு உத்தரவு

(நமது நிருபர்)

வடக்குக் கிழக்கு பகுதிகளில், சிறிலங்காப் படைத்தரப்பின் புலனாய்வுத் துறையினரின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களை மீளக் கையளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சிறிலங்கா புலனாய்வுத் துறையினரின் நடவடிக்கைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த உத்தரவு சிறிலங்கா படைத்துறை தலைமையகத்தால் விடுக்கப்பட்டுள்ளதாகவும், மாதாந்த வாடகைக் கொடுப்பனவின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த இந்த வாகனங்களை, இன்றைய தினத்துடன் உரிய தரப்பினரிடம் கையளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரை, கிழக்கு மாகாணத்தில் செயற்படும் சிறிலங்கா படைப் புலனாய்வுத் துறையினரின் வாகனங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், சிரேஸ்ட மற்றும் கனிஸ்ட அதிகாரிகளின் கடமைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வடக்குக் கிழக்கு பகுதிகளில் கடமையில் ஈடுபட்டுள்ள புலனாய்வுத் துறை அதிகரிகளின் வாகனங்கள் இவ்வாறு மீளப்பெறப்பட்டுள்ளமையானது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் சிறிலங்கா படைத்துறை வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

## மிருசுவில் படுகொலை வழக்கு மீண்டும் கொழும்பு நீதிமன்றில்!

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் மிருசுவில் மனிதப் படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மீண்டும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் யூரிகள் அற்ற 'ட்ரயல் அட் பார்' முறையில் ஆரம்பமானது.

19.12.2000ம் ஆண்டு விறகு வெட்டச் சென்ற 14 வயது சிறுவன் உட்பட 8 பேரை, வெட்டிப் படுகொலை செய்து புதைத்ததாக ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த சுனில் ரத்நாயக்கா, சேனக முனசிங்க, ரி.எம்.ஜயரத்ன, சமன் புஷ்பகுமார, காமினி முனசிங்க ஆகிய 5 பேர் மீது சட்டமா அதிபரினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதிலும் மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பதவி யேற்றதையடுத்து இந்த விசாரணை இடைநிறுத்தப்பட்டது. மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய தலைமையிலான நீதிபதிகள் குழுவில் உபாலி அபயரத்ன, சிறி அபயகுணவர்தனா ஆகியோர் இடம் பெற்றுள்ளார்கள்.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாட்சிகளுக்கு அழைப்பாணை விடுக்குமாறு உத்தரவிட்ட நீதிமன்றம் எதிர்வரும் மே மாதம் 22ம் திகதிக்கு விசாரணையை ஒத்தி வைத்ததோடு அதுவரை எதிரிகளை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டது.

## மீண்டும் ஒரு தேர்தல் வந்தால் ஜாதிக ஹெல உறுமய போட்டியிட முடியாது.

(நமது நிருபர்)

சிறிலங்காவில் அண்மையில் தேர்தலொன்று இடம்பெறுமாயின், ஜாதிக ஹெல உறுமய அந்தத் தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த கட்சியின் செயலாளர் பதவிக்காக இருவருடைய பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் ஜாதிக ஹெல உறுமயவில் உட்கட்சி முரண்பாடுகள் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து, இந்த கட்சியை முரண்பாடுகளுடைய கட்சியாக பிரகடனப்படுத்துவதற்கு, சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க தீர்மானித்தள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் பதவிக்கு, சிஹல உறுமயவின் உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவின் பெயரும், கொடபொல அமரகீர்த்தி தேரரின் பெயரும் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இதனையடுத்தே இந்த கட்சி, உட்கட்சி முரண்பாடுகளைக் கொண்ட கட்சிகளுடன் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் செயலக வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது. இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கான உயர் மட்டக்குழுவின் கூட்டமொன்று, இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## ஏழாம் கிராமம் கணேசா வித்தியாலயத்தில் அடிப்படை வசதியின்றி அவதி

(அ.தர்மா)

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை கல்வி வலயத்திலுள்ள நாவிதன்வெளி கல்விக் கோட்டம் மிகவும் கஷ்டப்பிரதேசமாக இருந்து வருகின்றது. இக்கோட்டத்தில் 7ம் கிராமம் (வீசித்திடல்) சது. கணேசா வித்தியாலயம் ஒரு அதி கஷ்டப் பிரதேச பாடசாலையாக இருந்து கவனிப்பாரற்ற நிலையில் நீண்ட காலமாக கல்வி அதிகாரிகளினாலும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.

இங்கு தரம் 1 தொடக்கம் தரம் 8 வரையான வகுப்புக்கள் இருக்கின்ற போதிலும் ஒரு கட்டடத்திலே வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இதனால் மாணவர்கள் மிகவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் கல்வி கற்று வருகின்றார்கள். பாடசாலைக்குச் சுற்றுமதில் இன்னும் அமைக்கப்படவில்லை, மலசல கூடங்களின் கதவுகள் சிதைவடைந்து காணப்படுகின்றது, கட்டடத்தின் கூரை ஓடுகள் சிதைவடைந்து தொடர்ந்து பெய்துகொண்டு வரும் அடைமழையினால் வகுப்பறைகள் நீரினால் நிரம்பிக் காணப்படுவதனால் மாணவர்கள் மழை காலங்களில் பாடசாலைக்கு வருவதற்கு விருப்பமற்ற நிலையில் உள்ளனர். இந்நிலை தொடர்ந்த வண்ணம் இருந்தால் குறிப்பிட்ட காலத்திற்குள் இப்பாடசாலை மூடப்படும் நிலையிலிருந்து கொண்டு வருகின்றதென பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் பழைய மாணவர் சங்கத்தினரும் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இக்கிராமத்தில் குடிநீர் போக்குவரத்து, சுகாதாரம், வீதி அபிவிருத்தி ஆகிய அடிப்படை வசதிகள் இல்லாமையால் பாடசாலை சமூகத்தினரும் இக்கிராம மக்களும் நிர்க்கதியால் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதோடு பெண் ஆசிரியைகள் தொடர்ந்து நீண்ட தூரம் நடந்தே சென்று வருகின்றனர். இதே வேளை இக்கிராம மக்கள் இங்கு குடி நீர் பற்றாககுறையால் 1 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள 15ம் கிராமத்திற்கே செல்ல வேண்டியுள்ளது. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாலும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் வருகின்றது என இப்பிரதேச வாசிகள் பெரும் அதிருப்தி கொண்டுள்ளனர்.

## குப்பைகள் கொட்டப்படுவதால் ஆலய வீதி அசுத்தமடைகின்றது.

**-மாநகர ஆணையாளரிடம் முறையீடு-**

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை சிவன் கோயில் அமைந்துள்ள இடத்திற்கு அருகில் மாநகர சபையினரால் கிராமங்களில் அள்ளப்பட்டு வரும் குப்பை கூழங்கள், கழிவுப் பொருட்கள் என்பவை கொட்டப்படுவதால் ஆலயத்தை ஒட்டிய புனித பிரதேசம் அசுத்தம் அடைகின்றது. இதனால் ஆலயத்தை அண்டிய பிரதேசத்தில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என பக்தர்கள், ஆலய நிர்வாகிகள் கல்முனை மாநகர ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளனர். கல்முனை மாநகர சபையினரால் வீதித் துப்பரவாக்கும் பணியில் கிராமங்களில் ஏற்படுகின்ற கழிவுப் பொருட்கள சந்தாங்கேணி மைதானத்தில் கொட்டப்படுகின்றது. இதனால் மைதானத்துக்கு பின்புறமாக அமைந்துள்ள இந்துக்களின் புனித சிவன் கோயில் பிரதேசம் அசுத்தமடைகின்றது.

ஆலயத்தின் அருகில் கொட்டப்படும் இக்கழிவுப் பொருட்களை பறவைகள், விலங்குகள் எடுத்து வந்து ஆலயத்தை அசுத்தமடையச் செய்கின்றது. அத்தோடு துர்நாற்றம் வீசுவதாலும் ஆலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபடுவதிலும் பக்தர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இச் சிவன் ஆலயத்திற்கு அண்மையில் பொது மக்களின் குடியிருப்புக்கள் என்பனவும் அமைந்துள்ளது. இதனால் அருகிலுள்ள மக்க ளுக்கும் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தேடல்கள் மூலம் மாணவர்கள் கல்வியை மென்மேலும் வளர்க்க வேண்டும்

## மட்.அம்பாறை கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் எஸ்.தாயகன்

(எம்.யுவராஜ்)



மாணவர்கள் பாடசாலைக் கல்வியைக் கற்றுக் கொள்வதுடன் தங்களை மென்மேலும் வளர்த்துக் கொள்வதற்கு அரிய நூல்களைத் தேடிக் கற்றுக் கொள்ளவேண்டும். பாடசாலையுடன் மட்டும் தங்கள் கற்றல் நின்றுவிடக் கூடாது. இவ்வாறு அண்மையில் மட்.கரடியனாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நூலகக் கண்காட்சியில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டு. அம்பாறை கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் எஸ்.தாயகன் தெரிவித்தார். வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கல்விக் கழகத் துணைப்பொறுப்பாளர் இவ்வாறான தேடல்கள் இல்லாத காரணங்களால்தான் உயர் தரப் பரீட்சைகளிலே மாணவர்கள் சித்தியடையும் வீதம் குறைவாகவுள்ளது. இவ்வாறான தேடல்கள் மூலம் பற்பல, புதிய விடயங்களை அறிந்து கொள்வதுடன் தமது அறிவாற்றல்களை மென்மேலும் வளர்த்துக் கொள்ளவும் முடியும் எனவும் பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்கள் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் தமதுரையில் குறிப்பிட்டார்.

# வினாவிடைப் போட்டியில் பட்டிருப்பு தேசிய பாடசாலை முதலாமிடம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு தேசியக் கல்லூரி கணித, விஞ்ஞான மன்றத்தினால் பட்டிருப்பு கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிடையே நடாத்தப்பட்ட வினாவிடைப் போட்டியில் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

களுதாவளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இப்போட்டியில் மேற்படி பிரிவிலுள்ள 32 பாடசாலைகள் பங்குபற்றின.

எழுத்துப் பரீட்சையில் மேற்படி தேசிய பாடசாலை மாணவர்கள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

வாய்மூல வினாவிடைப் போட்டிக்கு பட்டிருப்பு தேசிய பாடசாலை, செட்டிபாளையம் மகா வித்தியாலயம், பெரிய கல்லாறு மத்திய கல்லூரி, ஆகிய 03 கல்லூரிகளும் தெரிவு செய்யப்பட்டன.

இதில் பட்டிருப்பு தேசிய பாடசாலை அணியினர் வெற்றியீட்டி வெற்றிக் கிண்ணத்தையும் சான்றிதளையும் தட்டிக் கொண்டனர். கல்விக் கல்லூரியின் வெளியீடான ஈர்ப்பு சஞ்சிகையும் வழங்கப்பட்டது.

# கல்முனை தபால் ஊழியர்களுக்கு சீருடை வழங்கப்படவில்லை

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை தபால் அலுவலகத்தில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு 10 வருடங்களுக்கு மேலாகியும் சீருடை வழங்கப்படவில்லை. இச் சீருடையை வழங்குமாறு ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனை தபால் அலுவலகத்தில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு 1994 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சீருடை வழங்கப்படவில்லை. இதனால் மக்களுக்கும், தபால் ஊழியர்களுக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. பலர் சிவிலுடையிலே கடமையை மேற்கொள்வதால் பொது மக்களும் தங்களை இனம் காணச் சிரமப்படுவதாகவும் கூறுகின்றார்கள்.

கல்முனை தபால் அலுவலகம் அதிவிசேட தரத்திலுள்ள நிலையமாக இருந்தபோதிலும் தமது அலுவலகத்தை சில அதிகாரிகள் புறக்கணித்து வருவதாகவும், இங்கு கடமையாற்றும் தபால் ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

# இளைஞர்களின் உள்ளத்தை திருடி பணத்தை திருடும் இளம் பெண்கள்

(பாண்டிருப்பு நிருபர்)

பஸ்வண்டிகளில் பயணம் செய்யும் பிரயாணிகளிடம் நைசாக பேசி அவர்களிடம் உள்ள பணம், நகை என்பனவற்றை திருடிவரும் அழகிய இளம்பெண் திருடிகள் குறித்து விழிப்பாய் இருக்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் கல்முனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற பஸ் ஒன்றில் பயணம் செய்த இளைஞர் ஒருவருக்கு அருகில் நின்ற அழகிய இளம் பெண் ஒருவர் அவ் இளைஞனிடம் நைசாக கதை கொடுத்துள்ளார்.

அதன்பின் குறித்த இளைஞனும் அப்பெண்ணின் அழகில் மயங்கிய நிலையில் இருவரும் சுவரஸ்சியமாக உரையாடி வந்துள்ளனர்.

அந்நேரத்தில் இளைஞனின் கவனத்தை வேறுபக்கம் திருப்பிய குறித்த பெண்.. அவர் எதிர்பாராத நேரத்தில் அவரது மணிபஸ்சைத் திருடியுள்ளார்.

இதனை அறியாத இளைஞனும் அப் பெண்ணிடம் ஊர், பேர், விலாசங்களை விசாரித்தவண்ணம் வந்துள்ளார்.

குறித்த அழகிய பெண் திருடியும் அவருக்கு பொய்த் தகவல்களை கொடுத்துள்ளார். இந்நேரத்தில் இடை நடுவில் பஸ்சை விட்டு இறங்கிய பெண், அவ்விளைஞனுக்கு ''டாட்டா'' காட்டி விட்டுச் சென்றுள்ளார்.

பஸ் நடத்துனர் இளைஞனிடம் பணத்தைக் கேட்டபோதே தம்மிடம் இருந்த மணிபஸ்சை அப்பெண் திருடிச் சென்றது தெரிய வந்தது.

இவரைப்போல பலர் இவ்வாறான அழகிய பெண் திருடிகளிடம் பணம், நகை என்பனவற்றை பறிகொடுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

# தரம் 05 புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பட்டப்படிப்புக்கு ஏற்பாடு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, மாவட்டங்களில் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வறுமைக் கோட்டிற்குக் கீழ் மாணவ, மாணவிகளுக்குப் பட்டப்படிப்புக்குரிய செலவுகள் அனைத்தையும் பொறுப்பேற்ற கல்குடா பிரதேச முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அமரர் நல்லையாவின் புதல்வியான திருமதி.நளினி காசிநாதரின் நிதியம் முன்வந்து செயற்பட்டு வருகின்றது.

இந்நிதியத்தின் உதவித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சிறார்கள் மட்டக்களப்பு பிள்ளையாரடி மகா வித்தியாலயத்தில் கல்வி பயில்வதற்குரிய விடுதிச் செலவுகளையும் க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றும் வரைக்குமான நிதியத்தினை நல்லையா நிதியம் நடாத்த இருக்கின்றது.

எனவே இத்திட்டத்தின் கீழ் உதவி பெற விரும்பும் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் இவ்வருடம் சித்தியடைந்த மாணவர்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் பொருளாதாரத்தில் தரம் குறைந்த குடும்பங்களிலுள்ளவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் அ.குணரெத்தினம் அதிபர் பிள்ளையாரடி மகா வித்தியாலயம் மட்டக்களப்பு என்ற முகவரிக்கு 15.11.2004 ஆம் திகதிக்கு முன்னதாக தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். அமரர் நல்லையா நிதியத்தின் உதவியுடன் சென்ற ஆண்டு 2003 தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை சித்தியடைந்த மாணவர்களும் தற்போது தரம்-05 இல் பிள்ளையாரடி மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று வருவது குறிப்பிடத்தக்கது.

# வட.கிழக்கு மாகாண வைத்தியசாலைக்கு புதிய வைத்தியர்கள் நியமனம்

(எஸ்.சசி)

வட.கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு நேற்று 160 வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக மாகாணச் சுகாதார பணிப்பாளர் எஸ்.குமாரவேல்பிள்ளை தெரிவித்தார்.

இவ்வைத்தியர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள கிராமிய வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த வருடம் நியமிக்கப்பட்ட 170 வைத்தியர்களில் தற்போது 100 இற்கு மேற்பட்ட வைத்தியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டதாகவும், இதனால் கிராமிய வைத்தியசாலைகளில் ஏற்கனவே வைத்தியர் தட்டுப்பாடு நிலவியதன் காரணமாக வைத்தியசாலைகள் திருப்திகரமான சேவையில் ஈடுபடவில்லை. இனிமேலாவது நல்லமுறையில் செயற்பட இவ்வைத்தியர்கள் சேவை செய்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு பட்டதாரி ஒன்றியம் நடாத்தும் இலவச கல்விக் கருத்தரங்கு

(ராஜா)

அம்பாறை மாவட்டத்தில் கல்வியை மேம்படுத்தும் முகமாக காரைதீவு பட்டதாரிகள் ஒன்றியம் ஏற்படத்தப்பட்டது.

இத்திட்டத்தில் கடந்த காலங்களில் க.பொ.தராதர சாதரணதர, உயர் தர மாணவர்கட்கும், 05 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கட்கு கல்விக் கருத்தரங்குகள் இவ் அமைப்பினால் நடா த்தப்பட்டு வந்துள்ளது.

இந்த வருடம் மாணவர்களின் நன்மை கருதி பட்டதாரிகள் ஒன்றியம் இலவசக் கல்விக் கருத்தரங்கினை ஒழுங்கு செய்து நேற்று முதல் நடாத்தி வருகின்றது. முக்கிய பாடங்களான கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி போன்ற பாடங்கள் பிரபலமாகத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு விரிவுரைகள் நடைபெறும்.

இவ் விரிவுரைகளில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்தும் கலந்து கொள்கின்றனர்.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன் பெற விரும்பும் மாணவர்கள் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரிக்கு நேரடியாக காலை 09.00 மணிக்கு சமூகமளிக்குமாறு பட்டதாரி ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர்.

# அம்பாறை மாவட்டத்தில் நோன்பு பெருநாள் களை கட்டுகிறது

(எஸ்.சிவராஜா)

தற்போது சமாதான காலம் என்பதால் நோன்புப் பெருநாள் முன்னைய காலத்தை இம்முறை வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது.

இதற்கு கட்டியம் கூறியது போல் பிரதான நகரில் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிகின்றது.

கல்முனை நகரில் காலைமுதல் நள் இரவு வரை மக்கள் உடுதுணிகளையும் ஆடைகளையும் உற்சாகத்துடன் கொள்வனவு செய்வதை ஈழநாத செய்தியாளர் அவதானித்தார்.

பொருட்களை கொள்வனவு செய்யும் மக்களிடம் வினாவிய செய்தியாளர் பொது மக்களின் குறைகளைக் கேட்டார்.




அண்மையில் கொக்கட்டிச்சோலையில் இ.கி.மி. பாடசாலையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் வே.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற சமுர்த்தி எழுச்சித் திட்டத்தில் அதன் நன்மைகள் பற்றி உரையாற்றுவதையும், அருகில் சமுர்த்தி வங்கிச் சங்க உதவி முகாமையாளர் எஸ்.குருகுல சிங்கம் அமர்ந்திருப்பதையும் இதில் கலந்து கொண்ட பொது மக்களையும் படத்தில் காணலாம்.



# அரபாத்தும், பலஸ்தீனமும்

## பலவீனமான முன்னுதாரணமா?

**— ஐங்கரன் —**

பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் தலைமையும் பலஸ்தீன அதிகார சபையின் ஜனாதிபதியுமான யசீர்அரபாத் மருத்துவச் சிகிச்சைக்காக பிரான்ஸ் கொண்டு செல்லப்பட்டுள்ளார். பிரான்ஸ் மருத்துவக்குழுவினரும் அரபாத்தின் உயிருக்கும் ஏதும் ஆபத்து இப்போதைக்கு இல்லையென கூறியுள்ளனர். அரபாத்தின் உடல்நிலை எப்படியிருந்தாலும் அவரது போராட்ட பலம், அரசியல்பலம் என்பன ஆபத்தான நிலைக்குள்ளேயே மூழ்கடிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அவரது பலஸ்தீன மக்கள் நிர்க்கதியான அரசியலுக்குள் தத்தளித்துக் கொண்டிருப்பதையும், அவரது வெற்றிடம் நிரப்பப்படாததொன்றாகவே உள்ளதென்பதும் தற்போதே புலனாகிவிட்டது. எனவே அரபாத் என்ற விடுதலைப்போராட்ட வீரனின் கடந்த காலத்தையும் அவருக்கு ஏற்பட்ட நெருக்கடியையும் பரிசீலிப்போம்.

1929 இல் ஜெருசலத்தில் பிறந்த யசீர்அரபாத் ஒரு பொறியியலாளராவார். ஆரம்பகாலத்தில் எகிப்தின் இராணுவ பொறியியல் பிரிவில் கடமையாற்றினாலும் யுடு-குயவயா என்ற இஸ்லாமிய சகோதர அமைப்பின் உதவியாளராக விளங்கினார். 1964 இல் ஆரம்பிக்கப்பட்ட பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் உறுப்பினரான அரபாத் 1969 இல் அவ்வமைப்பின் தலைவராக விளங்கினார். 1971 இல் பலஸ்தீன விடுதலை அமைப்பின் புரட்சிப்படைப் பிரிவின் கட்டளைத்தளபதியாக விளங்கினார். இஸ்ரேலிய கட்டுப்பாட்டுப் பகுதி மீது கொரில்லாப் போர் முறையை பிரயோகித்த பலஸ்தீன விடுதலை அமைப்பு குண்டு த்தாக்கு தல்களையும் பதுங்கியிருந்து மேற்கொள்ளும் தாக்குதல்களையும் நடாத்தியது.

இஸ்ரேலிய கட்டுப்பாட்டுப் பகுதி மீது அரபாத்தின் புரட்சிப்படை நடாத்திய தாக்குதல்களை அடுத்து அரபாத் அரபுக்கள் மத்தியிலும், உலக நாடுகள் மத்தியிலும் எழுச்சியடையும் தலைவராக மாறிவிட்டார். இஸ்ரேலின் தாக்குதல்களையும் அடக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடிய அரபாத் மேற்காசியாவிலுள்ள அரபுநாடுகளின் செல்வாக்கையும் ஆதரவையும் பெறும் தலைவராக விளங்கினார். கூட்டாக அரபு நாடுகளின் படைகளின் உதவியோடு பலஸ் தீனம் மீதான ஆக்கிரமிப்பை முறியடிக்க பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் புரட்சிப்படை செயல்பட்டது. 1956களில் நடந்த போரில் இஸ்ரே லியரை விட அரபுக்களின் கை ஓங்கியிருந்தது. ஆனாலும் யூதர்கள் தமது தந்திரத்தால் அரபுப்படைகளை தோற்கடித்தனர்.

யசீர் அரபாத்தின் ஆயுதப் போராட்ட அணுகுமுறை சிறப்பாக அமைந்ததுபோல் அரசியல் ரீதியாக பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தையும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் சர்வதேச மயப்படுத்துவதில் அதிகசிரத்தை கொண்டிருந்தார். 1974இல் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை அரபு உச்சி மாநாட்டை கூட்டியபோது பலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் அழைத்திருந்தமை அரபாத்திற்கும் பலஸ்தீன விடுதலைப் போருக்கும் வெற்றியாக அமைந்திருந்தது. இதனைத் தொடர்ந்து பலஸ்தீன அமைப்பு ஐ.நாவின் அங்கத்துவத்தை பெற்றிருந்தது. அதன்பின்பு ஆயுதப் போராட்டத்திற்கு நிகராக அரசியல் போராட்டமும் சர்வதேச மயப்பட்டதுடன் உலக நாடுகளின் ஆதரவும் அவ்வமைப்புக்கு கிடைத்தது.

சோவியத்யூனியனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும் ஆதரவைப்பெற்ற பலஸ்தீன விடுதலைப் போராட்டம் அரபாத்தின் தலைமையில் எழுச்சியடைந்தது. சோவியத்யூனியன் தனது வீட்டோ வாக்கை பலஸ்தீனத்துக்கு எதிராக இஸ்ரேல், மற்றும் அமெரிக்க தரப்பால் முன் வைக்கப்படும் தீர்மானங்களுக்காக பலதடவை பயன்படுத்தியது. பலஸ்தீன விடுதலைப் போராட்டமும் சித்தாந்த அடிப்படையில் சோஸலிஸம் சார்புடையதென்ற வாதம் காணப்பட்டது.

இஸ்லாமிய அமைப்பாக இருந்த போதும் பலஸ்தீன விடுதலை இயக்ட் சோஸலிஸ சித்தாந்தத்தை கவர்ந்த அமைப்பாகவும் அத்தகைய நாடுகளின் ஒத்துழைப் பெறும் அமைப்பாகவும் விளங்கியது. இதனால் உலகளாவியசோஸலிஸ ஆதரவு சக்திகளும் தலைமைகளும் அரபாத்தின் போராட்டத்திற்கு ஆதரவளித்தன.

நடுநிலைமை அணி சேராமை என தம்மை அழைத்துக் கொண்ட பின்தங்கிய நாடுகளும் அரபாத்தை ஆதரித்தன. இதனால் பலஸ்தீன விடுதலைப் போராட்டம் வளர்ச்சியை நோக்கிய போராட்டமாக அளவீடு செய்யப்பட்டது. சர்வதேச மட்டத்தில் பிரபல்யமான போராட்டம் என்பதனால் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த அநேக சக்திகள் PLOவை பின்பற்றத்தொடங்கின.

பல அமைப்புக்கள் பயிற்சிக்காகவும் அரசியல் அனுபவத்தைப் பெறுவதற்காகவும் தமது போராளிகளைPOTக்கு அனுப்பி வைத்துக் கொண்டனர். இது அரபாத்தின் தனிமனித முயற்சியாகவும் உழைப்பாகவும் இருந்த போதும் பலஸ்தீன மக்களும் பங்கெடுத்துக் கொண்டனர்.

ஆனால், இந்த எழுச்சிக் காலம் 1979ஆம் ஆண்டு காம்டேவிட் எனும் உடன்படிக்கையோடு நெருக்கடியை எதிர்கொள்ளத் தொடங்கியது. காம்டேவிட்டில் நிகழ்ந்த உடன்படிக்கை PLOவோ, அரபாத்தோ சம்பந்தப்படாதிருந்தாலும் எகிப்துக்கும் இஸ்ரேலுக்குமான உடன்படிக்கையாக இருந்தது. இதனை அமெரிக்கா அனுசரணையாளராக நின்று செயல்படுத்தினாலும் உடன்பாடு அரபாத்தையும், PLO என்ற அமைப்பையும் நேரடியாகத் தாக்கத்துக்குள்ளாக்கியது.

அரபாத்தின் அரசியல் உபாயத்தால் இந்த உடன்பாட்டை நிறுத்த முடியவில்லை. எகிப்து முதல் முதலில் இஸ்ரேலை அங்கீ கரித்த முதல் மேற்காசிய நாடாகிய தென் பதைவிட PLOவுக்கான அனைத்து உதவி களையும் எகிப்து நிறுத்தியதுடன் PLOவின் தளங்களையும் பயிற்சி மையங்களையும் அகற்றுமாறு PLOவின் தலைமைக்கு பணித்தது PLO வின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் பெரும் பின்னடைவாக எகிப்தின் நடவடிக்கை அமைந்தது. அரபுக்களின் ஐக்கியம் படிப்படியாக உடைய ஆரம்பித்தது. PLOதனது தலைமையை லெபனான் நோக்கி நகர்த்தியது.

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலும் ஊடுருவலும் PLO வை 1982 இல் அங்கிருந்து வெளி யேற்றியது. 1983 இல் துனிசியஸ் PLO தலைமையை அமைத்தது. ஜோர் தான், சிரியா என்பன போதிய ஒத்துழைப்பு வழங்காமையால் PLO பெரும் நெருக்கடியை எதிர் கொண்டது. இத்தகைய நெருக்கடி உச்சக்கட்டத்தை அடையும் போது 1989 இல் சோவியத்யூனியன் தகர்ந்தது. சோவியத்தின் உடைவு அரபாத்தை- பெரியளவில் பாதித்தது.

உலகளாவிய தேசிய சுய நிர்ணயத்துக்கான போராட்டங்கள் மிக மோசமான சூழலை எதிர்கொண்டது போல் PLO பாதிப்படைந்தது. மீண்டும் ஈராக் மீதான போரை அமெரிக்கா 1991 இல் பிரகடனப்படுத்தியது. போரினால் அதிக பாதிப்பை அரபாத் சந்தித்தமைக்கு பிரதான காரணம் சதாம் ஹீசைனை அரபாத் ஆதரித்ததேயாகும். இக்காலத்தில் ஐ.நா. சபையும் அமெரிக்காவும் முன்வைத்த தீர்வுத்திட்டமாககாஸா ஜெரிக்கோ உடன்படிக்கை அமைந்தது. இது 1993 இல் செய்யப்பட்ட போதும் இதுவரை அமுலாக்கம் எதுவும் சாத்தியப்படாத நிலையில் ஆபத்தான போக்கில் அரபாத்தினதும் PLO வினதும் அரசியல் எதிர்காலம் இருப்பது மட்டுமன்றி, பலஸ்தீன மக்களது அரசியலும் அவ்வாறான தொன்றாக வேயுள்ளது. ஏன் அரபாத்தின் ஆயுதப் போராட்ட அணுகுமுறை தோற்றுப் போனது என்பதை விரிவாக நோக்குவோம். ஏனெனில் அரபாத்தின் எழுச்சிக்காலத்தில் அரபாத் பலஸ்தீனத்தை தெளிவாக உருவாக்கத் தவறி விட்டார் என்ற குற்றச்சாட்டு அவர் மீதுள்ளது. அவர் எப்போதும் தனது மக்களை யோ, போராட்ட சக்திகளையோ நம்பியதைவிட தனது அயல் அரபு நண்பர்களை அதிகம் நம்பினார். அதுமட்டுமல்ல, அயல் நாடுகளின் போராட்டத்தையும் அதன் தயார்ப்படுத்தலையும் ஒப்படைத்து விட்டு, அவர்களின் தயவில் போராட்டத்தை நடாத்தினார். இதனால் போராட்டத்தின் வெளித்தோற்றம் வளர்ந்ததேயன்றி உள்ளூர் போராட்டம் பலமடையவில்லை. பிரதேச அடிப்படையில் பாதுகாப்புக்கள் சாத்தியப்படவில்லை. மக்கள் போராட்டத்தில் நேரடியாக ஈடுபடுவதற்கான சூழல் உருவாக்கப்படவில்லை. இக்காலப்பகுதியில் வெற்றிபெற்ற அனைத்துப் போராட்டங்களிலும் மக்களின் நேரடிப் பங்குபற்றல் இருந்ததோடு தொடர்ச்சியானதும் தெளிவானதுமான போராட்டத்தளத்தை அந்தந்த மக்கள் கொண்டிருக்கின்றனர். மக்கள் அரசியல் மயப்படுத்தப்படுவதிலும் போராட்டத்தின் போக்கு தங்கியுள்ளதென்பதற்கு தெளிவான பாதகமான எடுத்துக்காட்டு பலஸ்தீன விடுதலைப் போராட்டமாகும். ஏவுகணைகளோடும் டாங்கிகளோடும், குறிபார்த்து தாக்கும் ஆயுதங்களோடும் எதிரி ஆக்கிரமிக்கும் போது கற்களோடு வீதியில் குவிந்து என்ன பயன் ஏற்படப் போகின்றது. இந்த பலவீனத்திற்கு அரபாத்தும் PLO வும்தான் காரணம் என்பதை மறுக்கமுடியாது. பலமான காலத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தை மேற்கொள்ளும் அமைப்புகள் மக்களையும் போராட்ட சக்திகளையும், பிரதேசபலத்தையும் தக்கவைத்திருப்பதோடு சொந்த மண்ணில் தங்கியிருக்கும் போராட்டமாக மாற்றுதல் வேண்டும். அதுமட்டுமன்றி தந்திரமாகவும் அரசியல் ரீதியாகவும் போராட்டத்தை எல்லைப்படுத்தி தீர்வை காண்பதற்கு தயாராக வேண்டும். ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டங்களை நீடித்த காலத்திற்கு முன்னெடுத்துச் செல்வதில் அதிக ஆபத்துக்கள் காத்திருக்கின்றன.

அரபாத்திடம் காணப்பட்ட பிரதான இன்னோர் பலவீனம் மிதவாதத்தை மட்டுமே நம்பியமை. தீவிரவாதத்தை முற்றாக கைவிடும் காலத்தில் மிதவாதத்தை கையில் தூக்கியதன் வாயிலாக இஸ்ரேல் - அமெரிக்க கூட்டுச்சதிக்குள் வீழ் வதற்கு வாய்ப்பாக அமைந்தது. சதி அரசியல் என்பதை புரிந்து கொண்டே காஸ்- ஜெரிக்கோ உடன்பாட்டில் அரபாத் கைச்சாத்திட்டார். அது மட்டு மல்ல சதி அரசியலை அவரால் உடைக்கவோ நெருக்கடிக்கு உள்ளாக்கவோ அவரால் முடியவில்லை. சதி அரசியலை முறியடித்துக் கொண்டு போராட்டத்தை வளர்க்க அவரால் முடியவில்லை.

மேலும் அரபாத் மீது இன்று முன் வைக்கப்படும் பிரதான குற்றச்சாட்டு தலைமைத்துவ வெற்றிடமாகும். ஆயுதப்போராட்ட அமைப்புகளுக்கு இயல்பாக எழும் வரலாற்றுச்சிக்கல் தலைமைத்துவமாகும். எந்த தலைமையும் சரியானதாக, தெளிவானதாக பலம் பொருந்தியதாக, அமைந்துவிடுவதில்லை. அதனால் பதில் தலைமை மீது ஆயுதப் போராட்ட தலைமைக்கும் நம்பிக்கையுமில்லை. அவ்வாறு நம்புவதும் தவறான விளைவுகளைத்தரக் கூடியதாகவே அமையும்.

அரபாத்தும் பதில் தலைமையை உருவாக்காது வெற்றிடமாக விட்டுள்ளார் என்பதையே சுட்டிக்காட்டுவதைவிட அரபாத் தனது தலைமைக்காலத்தில் அதற்குரியபங்கை ஆற்றாமல் அதனை வெற்றிடமாக விட்டுள்ளதால் அவரது தலைமை வெற்றிடமாகின்றது. உலகில் பிடல் காஸ்ரே வெற்றிகரமான ஆயுதப் போராட்ட தலைவராக விளங்குகின்றார். இந்தவரிசையில் மாவோசேதுங், கில்- மூர்சுங் போன்றவர்களைக்குறிப்பிட முடியும். காலத்தை துல்லியமாக மதித்து போராட்டத்தை சரிவர நிகழ்த்திக் காட்டியவர்கள். லெனின்கூட தனக்கு அடுத்த நிலையில் ஸ்டாலின் இருக்கின்றார் என்பதை நினைத்து மரணப்படுக்கையில் கண்ணீர் வடித்ததாக தெரியவருகின்றது. ஸ்டாலித் உண்மையில் ரஷ்யாவுக்கு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியேயுள்ளார். எனவே அரபாத் என்ற தனிமனித இராணுவ அரசியல் பலத்தைவிட பலவீனங்களை அதிகம் கொண்டதாக உள்ளது.

உலகில் உள்ள ஆயுதப் போராட்ட தலைமைகளும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் அரபாத்தும் பலஸ்தீனமும் ஒரு பலவீனமான முன்னுதாரணமாகும்.

## பல நோய்களின் பொதுவான அறிகுறியே காய்ச்சல்

பல நோய்களில் பொதுவாகக் காணப்படும் அறிகுறியே காய்ச்சல் ஆகும். சாதாரண உடல் வெப்பநிலை 36செல்சியஸ்37 செல்சியஸ் அல்லது 97செல்சியஸ் 98 செல்சியஸ் ஆகும். ஆனால் மனிதனுக்கு மனிதன் 2-3 அளவில் வேறுபாடுகள் காணப்படலாம்.

அத்துடன் காலை வேளையில் உடல் வெப்ப நிலை சற்றுக் குறைவாகவும் மதியம் சற்றுக் கூடுதலாகவும் இருக்கும் இதே போல் மழை காலங்களில் குறைவாகவும் வெயில் காலங்களில் கூடுதலாகவும் காணப்படும். இது சாதாரணதர ஒரு மாற்றமாகும்.

உடல் பெப்பநிலை சதாரண நிலையை விட 1-2 கூடுகின்ற போது அதனை காய்ச்சல் என்கின்றோம். 102 க்கு மேல் காய்ச்சல் இருந்தால் உடனே மருத்துவ உதவியை நாடவும்.

இக்காய்ச்சலை மூன்று வகையாகப் பிரிக்கலாம். தொடர்ச்சியான காய்ச்சல் (Continuous Feuer)> இடை விட்ட காய்ச்சல்(Intermittant Fever), தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் காய்ச்சல்(RemittenFevr)

**அறிகுறிகள்.** குளிரால் உடல் நடுக்கம், தலைவலி, உடல் வலி, தாகம், வயிற்றுப்போக்குஅல்லது மலச்சிக்கல் இருக்கும்.. நாடித்துடிப்பும், சுவாசமும் அதிகரிக்கும்.. தோல் வறண்டு போகும்- பசி இருக்காது, சிறுநீர் கழிப்பது குறையும்., காய்ச்சல் கடுமையாக இரு ந்தால் வாய் உளறுவார்கள்.

**காய்ச்சல் வந்தால் நீங்கள் செய்யும் முதலுதவி:-**

* காய்ச்சல் ஓர் நோயின் அறிகுறி என்பதனால் இதனை என்ன வென்று கண்டு பிடித்து மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.
* அதேசமயம் காய்ச்சல் தனிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
* பாதிக்கப்பட்ட நபரை ஓர் சுத்தமான அறையில் ஓய்வாகப்படுக்க வையுங்கள்.
* வெதுவெதுப்பான இளஞ்சூடான நீரால் அவர் உடலை ஒத்தடம் கொடுக்கவும்.

**உதயராஜ், மருத்துவப்பிரிவு.**

# உலக செய்திகள்

## பலூஜா நகரில் அமெரிக்க விமானங்கள் குண்டுத்தாக்குதல்; ஐந்து பேர் பலி !

(பலூஜா)

ஈராக்கில் உள்ள பலூஜா நகரில் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடாத்தியதில் 5 பேர் பலியாயினர். அமெரிக்க தேர்தல் முடிந்து விட்ட நிலையில் ஈராக்கில் சதாம் ஆதரவாளர்களை முற்றிலுமாக ஒடுக்கும் பொருட்டு அமெரிக்கப் படைகள் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளன.

ஈராக் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படையினர் தொடர்ந்து அங்கு தங்கியுள்ளனர். ஈராக்கில் சதாம் ஆட்சி ஒழிக்கப்பட்டு விட்டாலும் அவரது ஆதரவாளர்கள், அவ்வப்போது அமெரிக்க கூட்டணிப் படைக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகின்றனர். இவர்களை ஒழித்துக்கட்ட அமெரிக்க இராணுவமும் தொடர்ந்து பதிலடி கொடுத்து வருகிறது.

ஈராக்கில் சதாம் ஆதரவாளர்கள் அதிகமுள்ள பலூஜா நகரில் நேற்று முன்தினம் நள்ளிரவில் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. ஒரே சமயத்தில் இராணுவ பீரங்கிகளும் குண்டு ''மழை'' பொழிந்தன. இந்த தாக்குதல்களில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.

விமானத் தாக்குதல் தொடங்கியவுடன் சிலர் காரில் ஏறி ஊரை விட்டு தப்பியோட முற்பட்டனர். அப்போது குண்டுகள் காரை ''பதம்'' பார்த்தன. இந்த தாக்குதலில் பெண் ஒருவர் காயமடைந்தார். அந்த இளம் பெண்ணுக்கு கால் துண்டானது.

பலூஜா மற்றும் ராம்டி ஆகிய இருநகரங்களுமே சன்னி முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகள். இருநகரங்களிலும் அதிகமுள்ள சதாம் ஆதரவாளர்களை விரட்டி முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்க ராணுவம் இறங்கியுள்ளது. அமெரிக்க விமான தாக்குதலுக்கு பயந்து பலூஜா நகரிலிருந்து மட்டும் இதுவரை மூன்று லட்சம் பேர் தப்பியோடியுள்ளனர்.

அமெரிக்க தேர்தல் முடிந்து விட்ட நிலையில் ஈராக்கை முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது.

## அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷிக்கு இந்தியப் பிரதமர் வாழ்த்து செய்தி

(புதுடில்லி)



அமெரிக்க அதிபராக மீண்டும் வெற்றி பெற்ற புஷ்ஷிற்கு ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர். அவரை இந்தியா வருமாறு மன்மோகன் சிங் அழைப்பு விடுத்தார். அமெரிக்க அதிபர் புஷ்ஷிற்கு ஜனாதிபதி அப்துல் கலாம் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், நீங்கள் மீண்டும் அமெரிக்க அதிபராக தேர்வு பெற்றதற்கு இந்திய அரசு சார்பிலும், மக்கள் சார்பிலும் வாழ்த்துக்கள். உங்களது உறுதியான தலைமையின் கீழ் இருநாட்டு உறவுகளும் மேலும் வலுப்படும் என்று நம்புகிறேன். உயர் தொழில்நுட்ப பரிமாற்றத்தில் நீங்கள் எடுத்த நடவடிக்கை எங்கள் நாட்டில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இருநாட்டு உறவு மேலும் விரிவடைய வேண்டும்" என்றார்.

பிரதமர் மன்மோகன் சிங் அனுப்பிய வாழ்த்து செய்தியில் கூறியதாவது: அமெரிக்க அதிபராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட உங்களுக்கு என் சார்பிலும் இந்திய மக்கள் சார்பிலும் நல் வாழ்த்துக்கள். நீங்கள் இந்தியாவிற்கு வருமாறு அழைக்கிறேன். அப்பயணம இருதரப்பு உறவில் ஒரு மைல் கல்லாக அமையும். விரைவில் உங்களை இந்தியாவில் வரவேற்கும் வாய்ப்பு கிடைக்குமென நம்புகிறேன்.

இருநாடுகளும் உலகில் மதத் தீவிரவாதம் பரவாமல் தடுத்து அதை ஒழிக்க இணைந்து போராட வேண்டும். உலக அமைதியை கருத்தில் கொண்டு பேரழிவு ஆயுதங்களின் பரவலை தடுத்து நிறுத்த வேண்டும்.

அமெரிக்காவும் இந்தியாவும் பொருளாதார ஒத்துழைப்புக்கு திட்டம் வகுக்க வேண்டும். உயர் தொழில்நுட்பம், வர்த்தகம், பாதுகாப்பு துறைகளில் இந்த ஒத்துழைப்பு தொடர வேண்டும். ஆப்கானிஸ்தானில் தேர்தல் நடாத்தி முடிக்கப்பட்டு ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டு இருக்கிறது. ஈராக்கில் ஜனநாயகத்தை நிலை நாட்ட தேர்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும். இவ்வாறு பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் கூறினார்.

## விமான விபத்திலிருந்து அஜித், ஷாலினி மயிரிழையில் உயிர் தப்பினர்

(சென்னை)

படப்பிடிப்பிற்காக இத்தாலி நாட்டு விமானத்தில் சென்று கொண்டிருந்த நடிகர் அஜித்தும், அவரது மனைவி ஷாலினியும் அதிருஷ்டவசமாக உயிர் தப்பினர்.

நடிகர் அஜித்குமார் பூஜா நடிக்கும் ''அட்டகாசம்'' படம் தயாராகி வருகிறது. இந்தப் படத்தின் பாடல் காட்சிகளை ருமேனியா நாட்டில் எடுக்க விரும்பினர்.



இதற்காக அஜித், ஷாலினி மற்றும் படத்தின் கதாநாயகி பூஜா, இயக்குனர் சரண், ஒளிப்பதிவாளர் வெங்கடேஷ் ஆகியோர் அடங்கிய குழுவினர் கடந்த 22ம் திகதி ருமேனியாவிற்கு சென்றனர்.


அங்கு படப்பிடிப்பை முடித்துக் கொண்டு இத்தாலி நாட்டு விமானத்தில் மிலன் நகருக்கு வந்தனர்.

அங்கிருந்து விமானத்தில் இக்குழுவினர் டுபாய்க்கு புறப்பட்டனர். விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் பனி மூட்டத்தில் சிக்கியது. இதனால், செல்ல வேண்டிய திசையில் தொடர்ந்து விமானம் பறக்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் விமானம் கடலுக்கு மேல் பறந்து கொண்டிருந்த போது விமானத்தின் என்ஜின் பகுதியில் திடீரென கோளாறு ஏற்பட்டது. பயணிகள் அலறினர். இதனால் விமானம் சில வினாடிகள் தள்ளாடியது.

## ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் உட்பட உலக தலைவர்கள் புஷ்ஷிக்கு பாராட்டு

(ஐக்கிய நாடுகள்)

அமெரிக்க அதிபராகப் புஷ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு ஐ.நா. பொதுச் செயலாளர்




கொபி அனான் மற்றும் உலக நாடுகளின் தலைவர்களும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. பொதுச் செயலர் கொபி அனான் : மீண்டும் அதிபரான புஷ்ஷுடனும், அவரது நிர்வாகத்துடனும் ஐ.நா. இணைந்து உறுதியாகச் செயல்படும். தேர்தல் தோல்வியை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்ட ஜோன்கெரியையும், ஆர்வமாக ஓட்டளித்த அமெரிக்க மக்களையும் பாராட்டுகின்றேன்.

**ரஷ்ய அதிபர் புடின:** பிரிவினை, சிதைவு போன்ற பல்வே று இக்கட்டான நிலையில் உலகம் உள்ளது. இந்தச் சூழ்நிலையில் புஷ் மீண்டும் அதிபரானது வரவேற்கத்தக்கது. அவருடன் தொடர்ந்து ஒத்துழைப்புடன் ரஷ்யா செயல்படும். வறுமை, மத்திய கிழக்கு அமைதி போன்ற தீராத பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் காண வேண்டும். அதற்குப் புஷ் தேர்வு சரியாக இருக்கும். சர்வதேச தீவிரவாதத்தை ஒழிக்க ஐரோப்பாவும் அமெரிக்காவும் இதன்மூலம் இன்னும் நெருங்கி பாடுபட வேண்டும்.

**இத்தாலி பிரதமர் சில்வி யோ மெர்லுறகோனி:** ''சர்வதேச தீவிரவாதத்துக்கு எதிரான போர்'' என்ற புஷ்ஷின் முழக்கத்துக்கு வெற்றி கிடைத்துள்ளது. தீவிரவாதத்தை எதிர்க்கும் அவரது துணிச்சலான முடிவுக்கு மக்கள் அங்கீகாரம் அளித்துள்ளனர்.

**பிரான்ஸ் அதிபர் ஜாக்கு வஸ் ஈராக்:** தீவிரவாதத்துக்கு எதிரான எங்கள் கூட்டுப் போராட்டத்துக்கு இன்னொரு பலம் கிடைத்துள்ளது. புஷ் மீண்டும் தேர்வானதால், பிரான்ஸ் அமெரிக்கா தொடர்ந்து தீவிரவாதத்தை எதிர்த்துப் போரிடும்.



**பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அராபத்:** புஷ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது, மத்திய கிழக்கு அமைதி நடவடிக்கையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். பாலஸ்தீன இஸ்ரேல் இடையில் நின்று போன அமைதி பேச்சு தொட ங்க புஷ் தொடர்ந்து முயற்சி மேற்கொள்வார். புஷ்ஷுடன் இணைந்து செயல்பட பாலஸ்தீனத் தலைவர்கள் தயாராக இருக்கின்றனர்.

**ஜேர்மன் அதிபர் ஜெராட் சிரோதர்:** புஷ் நிர்வாகத்துடன் தொடர்ந்து ஜேர்மனி நல்ல ஒத்துழைப்புடன் செயல்படும். தீவிரவாத ஒழிப்பு உட்பட சர்வதேச அளவில் நிலவும் பல்வேறு சவால்களையும் அமெரிக்காவுடன் இணைந்து ஜேர்மனி சந்திக்கும். பல்வேறு கடும் எதிர்ப்புகளை மீறி புஷ் மீண்டும் தேர்வானதற்கு வாழ்த்துக்கள்.

**சீனா அதிபர் ஜின்டா வோ:** புஷ் தேர்ந்தெடுக்கப்பட்ட தற்கு வாழ்த்துத் தெரிவிக்கிறேன். சீனா அமெரிக்கா இடையில் உள் ள உறவை மேலும் மேம்படுத்த விரும்புகிறேன். பல்வேறு துறைகளில் புஷ் நிர்வாகத்துடன் இணைந்து செயல்பட்டு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. ஆசிய பசுபிக் பகுதிகளில் அமைதியை மேம்படுத்த தொடர்ந்து பாடுபடுவோம்.

எனினும், சாதாரண அரபு மக்களும், அரசியல்வாதிகளும் புஷ் மீண்டும் அதிபரானதற்கு அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

**எகிப்து நாசரிஸ்ட் கட்சி தலைவர் டியா எல் டின் தாவூத்:** இந்த உலகில் மிகவும் வெறுக்கத்தக்க மனிதர் புஷ். அவர் மனிதர்களை மிகவும் புண்படுத்தி விட்டார். ஜோன் கெரி மிகவும் நல்லவர்.

சிரியாவில் உள்ள ஓட்டல் தொழிலாளி சலீம்: கெரியால் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வர முடியாது. ஆனால், புஷ் ஷுக்கு எல்லா ரகசியங்களும் தெரியும். கடந்த நான்கு ஆண்டு களில் புஷ் பெற்ற அனுபவங்கள் அவருக்கு உதவும் என்றார்.

## முன்னாள் பிரதமருடன் முஷாரப் இரகசியப் பேச்சுவார்த்தை

(இஸ்லாமாபாத்)

பாக். , அதிபர் முஷாரப் தனது இரு பதவிகளையும் தக்க வைத்துக் கொள்ள புது முயற்சியில் ஈடுபட்டுள்ளார். முன்னாள் பிரதமர் பெனாசிர் புட்டோவுடன் இது தொடர்பாக பாகிஸ்தான் அரசு ரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது. முஷாரப் இரு பதவியிலும் நீடிக்க பெனாசிர் ஆதரவு தெரிவித்தால், அதற்கு பிரதிபலனாக அவர் நாடு திரும்ப ஒப்புதல் தரப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் ராணுவத் தளபதி பதவியையும் கைவிடாமல் உள்ளார். அவர் இரட்டை பதவியில் நீடிப்பதற்கும் கடும் எதிர்ப்பு கிளப்பியுள்ளது. குறிப்பாக பாகிஸ்தான் எதிர்க் கட்சிகள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இதில் நாடு கடத்தப்பட்ட பெனாசிர் புட்டோவின் தலைமையின் கீழ் இயங்கும் பாக். மக்கள் கட்சியின் பங்கு மிக அதிகம். இரட்டை பதவியில் முஷாரப் நீடிப்பதற்கு எதிர்ப்பே இல்லாத நிலையை உருவாக்குவதற்காக பாக். , அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இது குறித்து பாகிஸ்தானில் வெளியாகும் ''டெய்லி டைம்ஸ்'' என்ற பத்திரிகையில் கூறியிருப்பதாவது:முஷாரப்புக்கு சாதகமான நிலையை உருவாக்க பெனாசிர் புட்டோவுடன் பாக். அரசு ரகசிய பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. முஷராப் இரட்டை பதவி வகிக்க, பெனாசிர் புட்டோ உதவி செய்ய வேண்டும். இதற்கு பிரதிபலனாக பெனாசிர் நல்ல முறையில் நாடு திரும்ப உதவி செய்யப்படும். தற்போது சிறையில் உள்ள பெனாசிர் புட்டோவின் கணவர் ஆசீப் சர்தாரி விடுதலை செய்யப்படுவார். பாக். மேல் சபையின் தலைமை பதவி பெனாசிருக்கு கிடைக்க வழி ஏற்படுத்தி தரப்படும் என பாக். , அரசு சார்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

# சச்சினை நம்பிய ரசிகர்களுக்கு பலத்த ஏமாற்றமே கிடைத்தது !

அடி நொறுக்கப்போகிறார் சச்சின் என்று ரசிகர்கள் ஆரவாரம் செய்ய. . . 5 ஓட்டங்களில் வெளியேறினார். அவர்தான் அப்படி என்றால், அடுத்து வந்த லக்ஸ்மனன் 1, கைப் 2 என்று முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் ஒதுங்கிக் கொள்ள. 33 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட். அதற்குப் பிறகு தலைவர் ராகுல் டிராவிட் ஒருமுனையில் ‘‘நின்று கொள்ள,” மறுமுனையில் வந்தார்கள். கொஞ்சம் ஓட்ட ங்கள் எடுத்துச் சென்றார்கள்.

41. 3 ஓவர்களில் 104 ஓட்டங்களுக்கு நமது ஆட்டம் முடிவுக்கு வந்தது. தலைவர் ராகுல் டிராவிட் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். அவர் தவிர, இரட்டை இலக்க ஸ்கோர் செய்தவர்கள் மூன்றே பேர். தினேஷ் கார்த்திக் (10), அனில் கும்ளே (16), ஹர்பஜன் சிங் (14) தவிர யாருக்குமே துடுப்பாட்டத்திற்கு வரவில்லை. உதிரிகள் வகையில் ஒரு 14 கிடைத்ததால், நூாறையாவது கடக்க முடிந்தது.





சுழலுக்கு சாதகமான ஆடுகளம் என்று சும்மா சொல்லக்கூடாது. புத்தம் புதிதாய் அறிமுகமான நாதன் ஹாரிட்ஸ், காலையில் மூன்று விக்கெட் அள்ளினார் என்றால், பிற்பகலில் அனில் கும்ளே, முரளி கார்த்திக், ஹர்பஜன் சிங் என்று நமது சுழல் கூட்டணிக்கு எக்கச்சக்கமாய் திணறியது அவுஸ்ரேலியா. லாங்கர் (12), ஹைடன் (35), நீண்ட நாட்களுக்குப் பிறகு திரும்பி வந்த ரிக்கி பொண்டிங் (11) அடுத்தடுத்து வெளியேறினர்.

கேடிச் (7), கிளார்க் (17), கில்கிறிஸ்ட் (26) என்று அடுத்து வந்தவர்களும் முரளி கார்த்திக், கும்ளே சுழலில் சிக்கி வெளியேறினர். நேற்றுமுன்தினம் முரளி கார்த்திக் பந்து வீச்சு மிகச்சிறப்பாக இருந்தது. அவர் 4 விக்கெட் வீழ்த்தினார். அனில் கும்ளே 5 விக்கெட் வீழ்த்தினார். டெஸ்ட் போட்டிகளில் 27வது முறையாக 5 விக்கெட் வீழ்த்துகிறார். அதிகமுறை 5 விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில் முரளிதரன், ஹாட்லி, ஷேன் வோர்னுக்குப் பிறகு, நான்காவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். தமிழக விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக் ஆரம்பத்தில் தடுமாறினாலும், போகப்போக, அபாரமாக கீப்பிங் செய்து அதிரடித்தார்.

அதிரடி சுழல் காரணமாக 203 ஓட்டங்களுக்கு அவுஸ்ரேலியா முதல் இன்னிங்ஸ் முடிந்தது. டேமியன் மார்ட்டின் பொறுமையாக விளையாடி டெஸ்ட் போட்டிகளில் 19வது அரைச்சதம் (55) பூர்த்தி செய்தார். அவுஸ்ரேலியாவுக்கு 99 ஓட்டங்கள் முதல் இன்னிங்ஸ் முன்னிலை கிடைத்தது.

அவர்களை இன்னும் குறைந்த ஸ்கோரில் சுருட்டியிருக்க முடியும். அதற்கான வாய்ப்புகள் இருந்தன. ஆனால், நமது பீல்டர்கள் மகாமோசம். நிறைய வாய்ப்புகளை நழுவ விட்டனர்.

இரண்டாவது இன்னிங்சை துவக்கிய இந்திய அணி, நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 5 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஆஸி. முதல் இன்னிங்ஸ் ஸ்கோரை விட இன்னும் 94ஓட்டங்கள் பின்தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## தொடர்வெற்றிகளை பெற்று நியூசிலாந்து முன்நிலை !

நியூசிலாந்து வங்கதேசம் இடையேயான இரண்டாவது ஒரு நாள் போட்டி நேற்று டாகாவில் நடக்கிறது. வங்கதேச சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது. முதலில் நடந்த டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து அணி 2-0 என்ற முன்னிலையில் அபார வெற்றி பெற்று, கோப்பையை கைப்பற்றியது. பின்னர் சிட்டகாங்கில் நடந்த ஒரு நாள் தொடரின் முதல் போட்டியில் இந்த அணி 138 ரன்கள் வித்தியா சத்தில் வங்கதேசத்தை வீழ்த்தியது. இந்நிலையில் இரண்டாவது போட்டி இன்று டாகாவில் நடக்கிறது.

இதில் நியூசிலாந்து வெற்றி பெறும் பட்சத்தில் வங்கதேசத்திற்கு எதிரான ஒருநாள் தொடரையும் கைப்பற்றி விடலாம். சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரை இழந்த வங்கதேச அணி, ஒருநாள் தொடரையாவது கைப்பற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

## இந்தியாவுக்கு ஆறுதல் வெற்றி

நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் தொடரில் இந்தியா-13 ஓட்ட ங்களால் வெற்றி பெற்றது. முதலாவது இனிஸில் இந்தியா 104 ஓட்டங்களையும், அவுஸ்திரேலியா 203 ஓட்டங்களையும் பெற்றது. இரண்டாவது இனிஸில் இந்தியா 205 ஓட்டங்களையும், அவுஸ்திரேலியா 93 ஓட்டங்களையும் பெற்றது.

மூன்றாவது நாள் நேற்று தனது இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய இந்தியா அணி மதிய போசன இடைவேளையின் போது 3 விக்கெட் இழப்பிற்கு 114 ஓட்டங்களைப் பெற்றது. கிளென் மெக்ரத்தின் பந்து வீச்சில் கௌதம்காம்பீர், விரேந்திர செவாக் ஆகியோர் குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

# சின்னாபின்னமாக சிதைந்து காணப்படும் சின்னக்காலபோட்டமடு வீதி

மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சின்னக் காலபோட்டமடுக் கிராமமூடாக செல்லும் பாதை குன்றும், குழியுமாகக் காணப்படுவதோடு இக்கிராமத்தைச் சுற்றி மூன்று ஆறுகளும் உள்ளன.

இந்த ஆறுகளைக் கடந்து செல்வதற்குரிய பாலங்கள் கூட இதுவரை போடப்படவில்லை என சின்னக்காலபோட்டமடு மக்கள் தமது கிராமத்தின் நிலை பற்றி ஈழநாதத்தின் மூலம் தெரிவிக்கின்றனர்.

இங்கு அமைந்துள்ள வீதி குன்றும், குழியுமாகக் காணப்படுவதால் இவ்வீதியூடாகப் பயணிக்கும் பயணிகள் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்வதுடன் வாகனங்களும் அடிக்கடி பழுதடைவதாகவும் மழை காலங்களில் வீதியிலுள்ள குழிகளில் மழைநீர் தேங்கி நிற்பதால் வாகனங்கள் வேகமாகச் செல்லும் போது தேங்கி நிற்கும் நீர் தெறித்து பாதசாரிகளின் உடைகள் அசுத்தமடைவதுடன், இவ்வீதியால் பாடசாலை செல்லும் மாணவர்களின் சீருடைகளில் கிறவல் கலந்த நீர்பட்டு செந்நிறமாக மாறுகின்றது எனவும் சின்னக்காலபோட்டமடு மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் இங்குள்ள ஆறுகளுக்கு பாலம் இல்லாததால் மழை காலங்களில் இக்கிராமத்தை விட்டு வெளி வேலைகளுக்கும், ஏனைய தேவைகளுக்கும் கூட செல்ல முடியாது இம்மக்கள் அல்லலுறுகின்றனர்.

இதற்குக் காரணம் இவ்வாறுகள் ஊடாக மழை காலங்களில் காட்டு வெள்ளம் அதிகளவில் வருவதால் எமது ஊரை விட்டு எங்குமே செல்ல முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலைமையை ஆண்டு தோறும் இம்மக்கள் அனுபவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

உதாரணமாக ஒரு மாதத்திற்கு தொடர்ச்சியாக மழை பெய்தால் சின்னக்காலபோட்டமடுவிலிருந்து கொத்தியாபுலை இருட்டுச் சோலைமடு, பன்சேனை, பாவற்கொடிச்சேனை போன்ற பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் அந்த ஒரு மாதத்திற்கும் பாடசாலைக்குப் போகமுடியாது.

இதனால் இவர்களின் ஒரு மாதத்திற்குரிய படிப்பு பாதிக்கப்படுகின்றது. காரணம் மழையின் போது இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் ஆறுகளைக் கடந்து செல்ல முடியாமேயே ஆகும் எனவும் இம்மாணவர்களின் பெற்றோர் கூறுகின்றனர்.இக்கிராமத்தின் வீதி, ஆற்றுக்குப் பாலமில்லாத பிரச்சினைகளால் இம் மக்களுக்கு பாம்புக் கடி, மற்றும் ஏதாவது விபத்துக்கள் ஏற்பட்டால் பல மைல்களுக்கு அப்பாலுள்ள அதாவது நகர் பகுதியை அண்டியுள்ள வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பொற வேண்டிய நிலைமையும் உள்ளது.

வைத்தியசாலைக்குச் சின்னக்காலபோட்டமடுவிலிருந்து திடீரென ஏற்படும் மாரடைப்புப் போன்ற நோயாளர்களைக் கொண்டு செல்வதனால் வாகன வசதியும் இருப்பதில்லை.

இதனால் இம்மக்களின் கூடுதலானவர்கள் உயிரிழக்கும் சந்தர்ப்பமே ஏற்படுகின்றது. அதுவும் மழை காலங்களில் இதனது தொகை அதிகமென்றே கூறலாம்.

இதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சின்னக் காலபோட்டமடு மக்களின் அவல நிலையை ஈழநாதம் பத்திரிகையூடாகவாவது அறிந்து இக்கிராமத்தின் வீதியை திருத்துவதற்கும் பாலங்களை அமைப்பதற்குமுரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென எங்கள் குரலூடாகக் கோரிக்கை விடுக்கின்றோம்.

*சி.சுபாஜினி*
*சின்னக்காலபோட்டமடு.*

**அன்புடன் வாசகர் நெஞ்சங்களுக்கு!**

**உங்கள் பிரதேசத்தில் அபிவிருத்தியில் பாரபட்சமா, புறக்கணிப்பா, ஊழல் மோசடிகளை ஈழநாதம் எங்கள் குரலுக்கு தகுந்த ஆதாரங்களுடன் அனுப்பிவையுங்கள் நிச்சயம் பிரசுரிப்போம்.**

**அனுப்ப வேண்டிய முகவரி**
**எங்கள் குரல்**
**ஈழநாதம்**
**மட்டக்களப்பு பதிப்பு**
**பிரதான வீதி**
**கொக்கட்டிச்சோலை.**

# ஏங்கள் குரல்

## தம்பிலுவில் கிராமத்தில் சீரழிந்து காணப்படும் சிறுவர் பூங்கா

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தம்பிலுவில் கிராமத்தின் பல குறைபாடுகளை ஈழநாதத்திற்குச் சுட்டிக்காட்டியும் இவற்றுக்குரிய தீர்வினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டார்களா? என்பது சந்தேகமே இருந்தும் எமது கிராமத்துக் குறைகளை சுட்டிக்காட்டி அதன் மூலமாவது தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் எங்கள் குரல் பகுதியில் மீண்டும் தம்பிலுவில் கிராமத்திலுள்ள இன்னுமொரு குறைபாட்டை சுட்டிக்காட்டலாமென நினைக்கின்றேன். அது தான் இங்கு அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவானது யாரும் கவனிப்பாரற்ற நிலையிலேயே காணப்படுகின்றது என்பதை ஈழநாதமூடாக சுட்டிக்காட்டுகின்றேன்.

இந்தச் சிறுவர் பூங்கா தற்போதய நிலையில் இங்குள்ள விளையாட்டு சாதனங்கள் உடைந்த நிலையில் காணப்படுகின்றது என இச்சிறுவர் பூங்காவிற்கு விளையாடச் செல்லும் சிறுவர்கள் மிகவும் கவலையுடன் கூறுகின்றனர். தமது பொழுது போக்கிற்கான சாதனங்கள் எதுவும் இல்லாது பூங்காவுக்குப் போவதால் எதுவித பிரயோசனமுமில்லை என்றே கூறலாம்.

சிறுவர் பூங்காவும் அந்தப் பூங்காவில் சிறுவர்களுக்கான விளையாட்டு சாதனங்களையும் அமைப்பது சிறுவர்களது மன ஒருமைப்பாட்டை வளர்ப்பதுடன், அவர்களது உளரீதியான செயற்பாடுகள் பாதிக்காத விதத்தில் அவர்களது சிந்தனைகள் செயற்பாடுகள் என்பன விருத்தியடைவதற்காகவே இவ்விறுவர் பூங்கா அமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் தம்பிலுவில்லில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவிலுள்ள விளையாட்டு சாதனங்கள் உடைந்த நிலையிலேயே இருக்கின்றது. இதனைத் திருத்துவதற்குரிய எந்த நடவடிக்கையோ அல்லது புதிய சாதனங்களை பூங்கா வில் அமைப்பதற்குரிய செயற்பாட்டை சம்பந்தப்பட்டவர் மேற்கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

தம்பிலுவில் சிறுவர் பூங்காவிலுள்[illegible] விளையாட்டுச் சாதனங்களை திருத்தியமைத்து இப்பகுதி சிறுவர்கள் தமது ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் கழிப்பதற்கும், இச் சிறுவர்களின் உடல் உளவிருத்தியை மேம்படுத்தவும் இச்சிறுவர் பூங்காவின் குறைகளை நேரில் வந்து பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என ஈழநாதமூடாக அதிகாரிகளைக் கேட்டு நிற்கின்றேன்.

**பு.சீலன்**
**தம்பிலுவில்.**



## சிந்தனைக்கு

எமது மொழியில், எமது கலைகளில், எமது பண்பாட்டில், எமது மண்ணில் நாம் கொள்ளும் பாசமும், நேசமும் தேசப் பற்றுணர்வாக பரிணாமம் பெறுகின்றன.

*மேதகு. வே.பிரபாகரன்.*
*தமிழீழத் தேசியத் தலைவர்*

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
மின்னஞ்சல் :- batti@eezhanatham.com
தொலைபேசி :- 065-2226110
தொலைநகல் :- 2226303

05-11-2004

# ஜனாதிபதித் தேர்தலும் எத்தனிப்புக்களும்!

ஜனாதிபதி தமது பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடம் நீடித்து வைத்திருப்பது அரசியல் கள நிலவரங்களில் பல சர்ச்சைகளையும் சந்தேகங்களையும் கிளப்பியுள்ளது. எதிர்வரும் 2005ம் ஆண்டு டிசம்பர் 22ம் திகதி ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைகின்றது. ஆனால் அவர் இரகசியமாகச் செய்த பதவிப் பிரமாணத்தின் அடிப்படையில் மேலும் ஒரு வருட காலத்தை நீடித்து வைத்துள்ளார்.

2005ம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை. 2006ம் ஆண்டில் அது பற்றிச் சிந்திப்போம் என்கிறார் ஜனாதிபதி. மறுமுனையில் 2005ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்தித்தான் ஆகவேண்டும் மறுத்தால் நாடளாவிய ரீதியில் போராட்டத்தை நடாத்தப் போவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தற்போது திட்டங்களைத் தீட்டி வருகின்றது. இந்தப் போராட்டத்தின் முதற்கட்டமாகவே விலை வாசி ஏற்றத்திற்கு எதிரான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் ,வெற்றிபெறுவதானால் அடிமட்டத்தில் இருந்து ஆதரவைத் திரட்ட வேண்டும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஊழியர்களுக்கான மாத வேதனம் அதிகரிக்கப்படாமை போன்ற இரு விடயங்களையும் கிளறி ஆளும் தரப்பிற்கு இருக்கும் ஆதரவினை சுவீகரிக்கும் வேலைத் திட்டங்கள் நடந்தேறி வருகின்றன. கொழும்பு, குருநாகல், கண்டி என அவர்களது போராட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டுச் செல்கின்றன. தற்போது ஐக்கிய தேசியக் கட்சியிருக்கும் நிலையில் மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தல் வருமாயின் இக்கட்சியை விட போட்டியிடும் வேட்பாளர்களது செல்வாக்குகள் கவனிக்கப்பட வேண்டியாத இருக்கின்றது. ஜனாதிபதி இரு தடவைகள் தான் பதவி வகிக்க முடியுமாதலால் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் ஆளுமை மிக்கதொரு தலைமையை ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்ந்தெடுப்பதில் சிரமங்கள் ஏற்படும். இதே வேளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பாக நிறுத்தப்படும் எந்த வேட்பாளரையும் விட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்காவின் செல்வாக்கு அதிகமாகவிருக்கும். அது வெற்றிக்கு வழிவகுக்கும் என திடமாக நம்பியுள்ளது. எனவே எப்படியாவது எதிர்வரும் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் அதிக கவனத்தைக் காட்டி வருகின்றது. மறு புறம் ஜனாதிபதித் தேர்தலை மேலும் ஒரு வருடத்திற்கு காலம் கடத்தும் ஜனாதிபதி ஐக்கிய தேசிய முன்னணியின் கடந்த கால ஆட்சியிலுள்ள சில ஓட்டைகளை துருவி ஆராய்ந்து முக்கிய புள்ளிகள் மீது குற்றம் சுமர்த்தி அவர்களை சிறைக்கூடங்களில் அடைக்க முயற்சிக்கின்றது என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

இத்தகைய நிலையில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை நிறுவி சமாதானத்திற்கான உறுதிப்பாட்டை சிங்களத் தலைமைத்துவம் ஏற்படுத்மா என்பது கேள்விக்குறி எந்தவொரு கட்சி வேட்பாளரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவதனால் சிறுபான்மைக் கட்சிகளின் வாக்குகள் அவசியமானது. அதிலும் தமிழ் மக்களின் வாக்கு முக்கியம் எனவே ஜனாதிபதித் தேர்தல் ஒன்று அடுத்த ஆண்டு நடைபெறுவதாக இருந்தால் பிரதான இரு கட்சிகளும் தமிழ் மக்களுக்கு ஆண்டார் காட்டும் காரியத்தில்தான் ஈடுபடுவார்கள் காரணம் ஒரு தூப்பு தப்பித்தவறி தமிழ் மக்களுக்கு ஒரு சாதகமான கொள்கையை முன்வைத்தால் தென்னிலங்கையில் கணிசமான அளவு வாக்குகள் குறையும் சூழல் ஏற்படும். எனவே ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டில் வருமாக இருந்தால் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை விடயத்தில் எத்தணிப்புக்கள் காட்டப்படுமே தவிர தீர்வுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனக் கருத இடமுண்டு.

# அம்பாறையில் தொடரும் அடைமழையால் விவசாயம் பாதிப்பு; மரக்கறி விலை உயர்வு

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறையில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக பெரும்போக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்போக விவசாயத்தில் குறிப்பாக புழுதி விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகளின் விதைப்பு பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் சேற்று விதைப்புக்காக மீண்டும் விதைக்க வேண்டியுள்ளது. அதன் காரணமாக விவசாயிகள் இருமடங்கு செலவு செய்ய வேண்டியுள்ளது. இதனிடையே விதை நெல்லின் விலையும் அதிகரித்து வருகின்றது. மலை நாட்டிலிருந்து வரும் மரக்கறி விலைகள் நாளுக்கு நாள் கூடிக் கொண்டு வருகின்றன. எனினும் உள்ளூர் உற்பத்தி மாம்பழங்கள் தாராளமாகக் கிடைத்து வருகின்றன. தாழ் பிரதேசங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றன.

# புத்துயிர் பெறுமா? திருக்கோயில் மணிக்கூட்டுக் கோபுரம்

(சர்வேஸ்வரன்)



திருக்கோயில் மணிக்கூட்டுக் கோபுரம் 1992ம் ஆண்டு கட்டப்பட்டது. கட்டப்பட்ட நாளில் இருந்து 3 வருடங்கள் மாத்திரமே இதன் உபயோகம் மக்களுக்குக் கிடைத்தது. திருக்கோயில் மணிக்கூட்டுக் கோபுரத்தை மையமாக வைத்து பஸ் தரிப்பு நிலையம் வைத்திய சாலை, பாடசாலை என்பன அமைந்திருக்கின்றது. அதனால் மணிக்கூட்டுக் கோபுரத்தின் முக்கியத்துவம் எந்த அளவிற்கு முக்கியமானது என்பதை உணர்ந்த கொள்ளலாம். இதை விடுத்து புறாக்களின் வாழ்விற்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. இந்த மணிக்கூட்டுக் கோபுரம் இது தவிர இயங்காமல் இருப்பதால் சுவரொட்டிகள் ஒட்டுகின்ற சுவராகவும் அவ்வப்போது காட்சியளிக்கின்றது. ஆகவே 9 வருட காலமாக இயங்காமல் இருக்கும் இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தை வெறு மனே புறாக்களின் வாழ்விடமாகவும் சுவரொட்டிகள் ஒட்டும் சுவராகவும் கருதாமல் புத்துயிர் கொடுத்து மக்களின் நன்மைக்காக புனரமைப்புச் செய்வது பிரதேச செயலாளரின் கடமையல்லவா?

# நாளை சைவ சமய பரீட்சை

(எஸ்.சிவராஜா)

கொழும்பு விவேகானந்த சபையினர் வருடா வருடம் நடாத்தி வரும் சைவ சமயப் பாடப் பரீட்சை இம்மாதம் 07ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் மேற்படி பரீட்சைகள் தரம் 03 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்பு மாணவர்களுக்கு நடைபெறவுள்ளது. பரீட்சைக்கான வினாத்தாள்கள் அவ்வப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மேற்படி பரீட்சைகளின் பொதுச் செயலாளர் திரு.க.இராபுவனேஸ்வரன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

# கடந்த காலங்களில் சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவும்.

**-வட கிழக்கு மாகாண தொண்டராசிரிய சங்க ஒன்றியத் தலைவர்.-**

(அ.தர்மா)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தொண்டராசிரியர்களுக்கு கடந்த 2001 ஆண்டு காலப்பகுதியில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு 1200 பேர் கொண்ட தகுதியான தெரிவு செய்யப்பட்டு பட்டியல் படுத்தப்பட்டு கல்விமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் படியே தயாரிக்கப்பட்டது. இதில் 1000 பேருக்கே அமைச்சரவை அங்கீகாரமும் திறைசேரி அனுமதியும் வழங்கப்பட்டு 857 பேருக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டு மீதியான விடுபட்ட 143 தொண்டராசிரியர்களின் பெயர்ப்பட்டியல் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்காக அனுப்பப்பட்டும் இன்னும் இதற்கான அனுமதி கிடைக்கவில்லை.

இதே வேளை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பெரு முயற்சியால் இன்னும் 750 தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கி மாகாணக் கல்வியமைச்சால் தொண்டராசிரியர் விபரச் சேகரிப்பு அண்மையில் இடம்பெற்றது. எனவே முன்பு பட்டியல் படுத்தப்பட்ட தொண்டராசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தாமல் நிரந்தர நியமனம் வழங்கி ஏனைய 1999, 2000 ஆண்டு காலப் பகுதியில் கற்பித்த தொண்டராசிரி யர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குமாறு வடக்கு கிழக்கு மாகாண தொண்டராசிரியர் ஒன்றியத்தின் தலைவர் அ.தருமரெட்ணம் தெரிவித்துள்ளார்.

# அம்பாறை மாவட்டத்தில் சட்ட விரோத மீன்பிடி முறை அதிகரிப்பு

(அ.தர்மா)

அம்பாறை மாவட்டத்தில் மீனவர்கள் சட்ட விரோதமான முறையில் மீன் பிடித்து வருகின்றனர். குறிப்பாக கிட்டங்கி, துறை வற்றியமேடு, நாவிதன்வெளி, குடியிருப்புமுனை மற்றும் மட்டக்களப்பு எல்லை கிராமங்களான பாலமுனை, துறை நீலாவனை, தம்பலவத்தை ஆகிய இடங்களில் மீனவர்கள் இழுவை வலையினால் மீன் இனங்கள் அனைத்தையும் பிடித்து வருகின்றனர். இதனால் ஆறுகளிலுள்ள மீனினங்கள் அடியோடு அழியும் நிலை ஏற்படும் அத்துடன் நீரில் வாழும் அனைத்து உயிரினங்களையும் அழிக்கும் நடவடிக்கையாகவே இது அமைந்துள்ளதென மக்கள் தெரிவித்துள்ளனர்.

கல்முனைப் பிராந்தியத்திலுள்ள மீன்படி பரிசோதகர்களுக்கு நல்ல மீன்வகைகளையும், களஞ்சியங்களையும் வழங்கி வருவதனால் அவர்கள் பாராமுக மாகவே இருந்து கொண்டு வருகின் றனர். இதுவரையில் மீன் பிடித்திணைக்களத்தினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளே இதனை படிப்படியாகத் தடுத்து நிறுத்தினர். ஆனால் சட்ட விரோத மீன் பிடித்தல் தற்போதும் இடம் பெற்றுக் கொண்டு வருகின்றது. இவ்வாறு தொடர்ந்தால் ஆறுகளிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் அழிக்கப்படும் இதனை உடன் தடுத்து நிறுத்த மீன் பிடித்திணைக்கள உயர் அதகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டு மென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.



அம்பிளாந்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆலய அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்களைப் படத்தில் காணலாம்.
படம்:- சூரியகுமார்)

# உயர்தர ஆசிரியர்களை உள்வீர்க்க நேர்முகப் பரீட்சை

(வி.ரி.சகாதேவராஜா)

வட கிழக்கில் நியமிப்பதற்கென தெரிவான க.பொ.த. உயர்தர சித்தி பெற்ற ஆசிரியர்களக்கான நேர்முகப் பரீட்சை மிக விரைவில் நடைபெறவிருக்கின்றது அதற்கான பெயர்ப் பட்டியலை கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல் நேற்று முன்தினம் வட கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என எமது காரைதீவு நிருபர் கூறுகின்றார்.

ஒவ்வொரு பாடத் துறைக்கும் நிரப்பப்படவேண்டிய வெற்றிட எண்ணிக்கையின் மும்மடங்கு பரீட்சாத்திகளின் பெயர் விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் பல பாகங்களிலும் பலத்த மழை

வங்காள விரிகுடாப் பகுதியில் தோன்றியிருந்த தாழமுக்க நிலையானது தற்போது இலங்கையின் வட பகுதியில் தாழமுக்கமாக உருவாகியுள்ளது. இதன் தாக்கத்தினால் இலங்கையின் பல பாகங்களிலும் மழை பெய்யும். என எதிர்பார்க்கப்படுகின்றதாக. கொழும்பு வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, வட மத்திய, வட மேற்கு, மற்றும் மேற்குப் பிராந்தியங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். பிற்பகல் அல்லது மாலை வேளைகளில் மத்திய, ஊவாப் பிராந்தியங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்.

காங்கேசன்துறை ஊடான புத்தளம் முதல் திருகோணமலை வரையுள்ள கடல்ப் பிராந்தியங்களில் சற்று வேகமான காற்றுடன் மழை பெய்யும்.

அதேவேளை மட்டக்களப்பு ஊடான காங்கேசன்துறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரையான கடல்ப் பிராந்தியங்களில் காற்றானது மணித்தியாலத்துக்கு 30 தொடக்கம் 50 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மிக ஆபத்தான நிலையில் யசீர் அரபாத்தின் உடல் நிலை

பாலஸ்தீன இயக்கத் தலைவர் யசீத் அரபாத் மிக ஆபத்தான நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தனர்.பிராஸ் இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டிருக்கும் இவர் சுய நினைவு இழந்த நிலையில் இருப்பதாகவும் உயிரைத் தக்க வைக்கும் சில கருவிகள் இவரை இயக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படும் அதேவேளை அறபாத் அவர்களின் உயிர் எந்த நேரத்திலும் பிரியும் ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பத்து இலட்சம் பேருக்கு விரைவில் தொலைபேசி அழைப்பு

(வி.ரி.சகாதேவராசா)

எதிர்வரும் ஓரிரு மாதங்களில் நாட்டில் பத்து லட்சம் பேருக்குப் புதிதாக தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட இருக்கின்றன.

அதற்கான நடவடிக்கைகளை "ரெலிக்கொம்" நிறுவனம் மேற்கொண்டு வருவதாக தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

புதிய தொலைபேசி இணைப்பிற்காக நாட்டில் இதுவரை 07 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்தார்கள்.கடந்த 10 வருடங்களாக தொலைபேசி கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு விண்ணப்பித்த ஒழுங்குப்படி தற்போது இணைப்பிற்கான பணம் செலுத்தும் படிவம் அனுப்பப்பட்டு வருகின்றது.

13,500 ரூபா அளவில் செலுத்த வேண்டி ஏற்படும். அதுவும் இரு தடவைகளில் செலுத்தலாம். எதுவானாலும் 07 நாட்களுள் தெரியப்படுத்த வேண்டும் என ரெலிக்கொம் கேட்டுக் கொண்டிருக்கின்றது. வருங்காலத்தில் விண்ணப்பித்து 24 மணி நேரத்தில் இணைப்பு வழங்கப்படவுள்ளது.

**(நோர்வே...)**

12ம் திகதி வரை தங்கி நிற்பார் எனவும் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களையும் சந்தித்துப் பேசுவார் எனவும் நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை ஏற்படுத்த வேண்டும் அதன் மூலம் மனிதாபிமான பணிகளை முன்னெடுத்து போரினால் சிதைவடைந்த தமிழர் தாயகத்தை புனரமைக்க வேண்டும் என்பதை விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வரும் சூழலில் சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தைக்கான அணுகு முறைகளைக் கையாளவில்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் பீற்றர்ஸனின் வருகை சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான விரைவாக்கத்தை ஏற்படுத்துமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**(கிருஷாந்தி...)**

லாவது எதிரியான சோம பக்ஷ ஆட்கொனர்வு மனுத்தாக்கல் செய்திருந்தார்.எனினும் இவர் சார்பாக சட்டத்தரணிகள் எவரும் ஆஜராக விரும்பாத நிலையில் அறிக்கையைச் சுயமாகத் தயாரித்து வருமாறும் தேவையான உதவிகளை சிறைச்சாலை அதிகாரிகள் வழ்ங்க வேண்டுமெனவும் நீதிபதி கே.வரதராஜன் உத்தரவிட்டுள்ளார்.

அந்த மனுவில் அரியாலைப் படைமுகாம் பொறுப்பதிகாரியாகவிருந்த லலித்குமார, சிறிலங்கா படைத் தளபதியாக இருந்த லயனல் பலகல்ல, சட்டமா அதிபர் மீதும் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதில் லலித் குமார, லயனல் பலகல்ல ஆகியோருக்கு இராணுவச் சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்

## காத்தான்குடியில் அச்சுறுத்தல் பிரசுரங்கள் வினியோகம்

மட்டக்களப்பு காத்தான் குடி பகுதியில் சுபி முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் "மஜ்லிஷுஸ் ஷூறா" என்ற அமைப்பினால் பிரசுரமொன்று வெளியிடப்பட்டு நேற்று விநியோகிக்கப்பட்டுள்ளது.

எமது ஊரில் கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஈமானுக்கு எதிரான போராட்டம் தொடரும்.

ஈமானுக்கு எதிரான சக்திகள் தமது "அத்வைத" கொள்கையை கைவிட்டு முழுமையாக இஸ்லாத்தில் இணைய வேண்டும்.

"அத்வைத"சக்திகள் தொடர்ந்தும் தமது கொள்கையிலிருந்து தூய இஸ்லாத்தில் இணைந்து கொள்ளத் தவறும் பட்சத்தில் பல்வேறு நெருக்கடிகளையும் இழப்புகளையும் எதிர் நோக்க வேண்டி வரும். இப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை வர்த்தகர்கள் தங்கள் வியாபார நிலையங்களை மூடி இப் போராட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டுமென அந்தப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட சுபி முஸ்லிம்களான அகில இலங்கை இஸ்லாமிய மெய் ஞானப் பேரவை இந்தப் பிரசுரம் ஜாமி அத்துல் உலமா சபை, இஸ்லாமிய வழிகாட்டல் நிலையம் ஆகியவற்றின் பின்னணியில் வெளியிடப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளது

## வடக்கு-கிழக்கிலிருந்து 48 நூலகங்கள் தெரிவு

(அக்கரைப் பற்று நிருபர்)

சர்வதேச பாடசாலைகள் நூலக தினத்தின் தேசிய விழா அம்பாறை டி.எஸ்.சேனனாயக்க தேசிய பாடசாலையில் கடந்த மாதம் 25ம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

தேசிய விழாவில் வட-கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 கலவி வலயங்களிலிருந்து ஒரு வலயத்திற்கு ஒரு சிறந்த பாடசாலை நூலகம் தெரிவு செய்யப்பட்டு, அதற்கு மேலதிகமாக பொப்லெப் என்ற தெரிவின் அடிப்படையில் ஒவ்வொரு வலயத்திலுமிருந்து ஒவ்வொரு சிறந்த பாடசாலை நூலகமாக 24 பாடசாலை நூலகங்களும் தெரிவுசெய்யப்பட்டு மொத்தமாக வட- கிழக்கில் தெரிவுசெய்யப்பட்ட 48 பாடசாலைகளுக்கும் பரிசில்களும், சான்றிதழ்களும் தேசிய விழாவில் வழங்கப்பட்டன.இதற்கமைய அக்கரைப்பற்று வலயத்திலிருந்து சிறந்த பாடசாலை நூலகமாக அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை நூலகமும், பொப்லெப் தெரிவில் சிறந்த நூலகமாக தம்பிலுவில் சரஸ்வதி மகா வித்தியாலய நூலகமும் தெரிவுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அமைச்சர் பேரியல் அஷ்ரப், வட-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம், மற்றும் கல்வியமைச்சின் நூலகப் பிரிவிற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கலந்து கொண்டனர்.

## வலது குறைந்தோருக்கு முச்சக்கர வண்டி

(நமது நிருபர்)

களுவாஞ்சிகுடி சக்தி சமூக நலன்புரி நிலையம் வலது குறைந்தோருக்கு முற்சக்கர வண்டிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.எந்த ஒரு அமைப்பாலும் முச்சக்கர வண்டிகளை பெறாதவர்கள் தலைவர் அல்லது செயலாளருக்கு கிராம சேவையாளர் அல்லது பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் விபரங்களை அனுப்பி வைக்குமாறு சக்தி இல்லம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## சம்மாந்துறை தொழிநுட்பக் கல்லூரி எழுத்துமூலப் பரீட்சை ஆரம்பம்

(ஏ.எல்.எம்.சலீம்)

சம்மாந்துறை தொழிநுட்பக் கல்லூரியில் நடைபெற்றுவரும் முதலாம், இரண்டாம்வருடப் பயிற்சி நெறிகளுக்கான உள்ளகப் பரீட்சைகள் விரைவில் நடைபெறவுள்ளன.

இதன்படி செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 8ம் திகதியும், எழுத்துப் பரீட்சைகளும் எதிர்வரும் 15ம் திகதியும் ஆரம்பமாகவுள்ளதாகக் கல்லூரி அதிபர் எம்.ஏ.கே. எம். அப்துல் ஹமீட் அறிவித்துள்ளார்.

மேலும் உள்ளகப் பரீட்சைக்கு நேரில் சமூகமளித்து பரீட்சைக்கான நேர அட்டவணையைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் அப்துல் ஹமீட் கோரியுள்ளார்.

## தன்னாட்சி அதிகாரசபை யோசனை அடிப்பயையில் சமாதானப் பேச்சு

தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க தமது அரசாங்கம் தயாராகவிருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் நடைபெற்ற பேச்சுக்களின்போது ஜனாதிபதி இவ் விடயத்தை தெரிவித்திருக்கிறார்.

சமஷ்டி அடிப்படையிலான தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் குறித்து விடுதலைப் புலிகளுடன் தமது அரசாங்கம் பேச்சு நடத்த தயாராகவிருப்பதாக குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, மிக விரைவில் பேச்சுக்கள் ஆரம்பமாகுமென்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## காத்தான்குடியில் இன்று ஊடகவியலாளர் சந்திப்பு

(நமது நிருபர்)

அகில இலங்கை மெய் ஞான பேரவையின் ஊடகவியலாளர் மாநாடு இன்று சனிக்கிழமை காத்தான்குடியில் நடைபெறவுள்ளதாக பேரவைப் பிரதிநிதி ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

பிற்பகல் நடைபெறும் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தமது மார்க்கத்தின் உண்மை நிலவரங்களைத் தெளிவுபடுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தென்கிழக்கு ஆய்வு மையம் இலக்கியப் பெருவிழா

(ஏ.எல்.எம்.சலீம்)

இலங்கை தென் கிழக்கு ஆய்வு மையத்தின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி இலக்கியப் பெரு விழா ஒன்று நடத்தப்படவிருக்கின்றது.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் இன்று சனிக்கிழமை இந்த விழா நடைபெறும்.இலங்கை தென் கிழக்குப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவரும், மொழியியல் துறைத் தலைவருமான மௌலவி கே.எம்.எச். காலிதீன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த இலக்கியப் பெருவிழாவில் ஊடகத்துறைப் பிரதி அமைச்சர் எம்.எச்.சேகு இஸதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

**(தெகிவளை...)**

கன் எனப்படும் கந்தையா யோகராஜாவிற்கு அடுத்த இடத்தில் இவர் செயற்பட்டுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்திலும் வன்னிப் பிரதேசத்திலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஊடுருவல் தாக்குதல் சம்பவங்களுக்கு உரிய தகவல்கள் இவரால் வழங்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது.இவர் குறிப்பிட்ட பகுதிகளுக்கு சாதாரண நபராகவே சென்று விபரங்களை சேகரித்துள்ளார். கொழும்பிலும் இப்படியான விபரங்களை சேகரித்துள்ளதாகக் கூறப்படும் இவரது தந்தை கே.வேலாயுதம் தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பு அலுவலகத்தில் வீ.ஆனந்தசங்கரியின் செயலாளராக பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**(இடைக்கால)**

ள் தயாரித்துள்ள இடைக்காலத் திட்ட வரைவு தொடர்பாக சர்வதேச சமூகத்திடம் விளக்கமளித்துள்ளோம். அண்மையில் எங்களது உயர் மட்டக் குழு சர்வதேச நாடுகளுக்கு சென்று இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அவசியம் பற்றித் தெளிவுபடுத்தியுள்ளனர்.

தற்போது சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்திருக்கின்றது. எனத் தெரிவித்த அவர் விடுதலையை வென்றெடுக்க, எமது உரிமைகளை வென்றெடுக்க, எமது கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற நாங்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும்.

அப்போதுதான் பின்தங்கிய பிரதேசமானது முன்தங்கிய பிரதேசமாக மாறும் எனக் குறிப்பிட்ட அவர் இந்த வைத்திய சாலையை திறப்பதோடு நின்று விடாது இதன் அடிப்படைத் தேவை கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், த.கனகசபை, க.தங்கேஸ்வரி, சுகாதார சேவைகள் பொறுப்பாளர் செல்வக்குமார் ஆகியோர் உரையாற்றினர்.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 06.11.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.